# அகல் விளக்கு

கைதடி உறவுகளின் காலாண்டு இதழ்

தை - ஆனி 2009


# உறவுகளுக்கு உதவிடுவோம்

வன்னிபபெரு நிலப்பரப்பில் நிகழ்ந்த யுத்த அனர்த்தத்தினால் எம் உறவுகள் பட்ட துன்பதுயரங்கள் பற்றியும் அவர்கள் அனுபவித்த கொடுமைகள் பற்றியும் ஊடகங்கள் மற்றும் தொலைபேசி உரையாடல் மூலமும் நாம் கேட்டும் பார்த்தும் அறிந்து பெரும் துயரத்தில் ஆழ்ந்து போனோம்.

.அந்த உறவுகளுக்கு எதுவும் நிகழக்கூடாது என்பதற்காக நாம் தினமும் பிரார்த்திக் கொண்டிருந்ததுடன் அந்த நாட்களில் எமது நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் மட்டுமல்ல எமது இல்லங்களுமே வழமைக்கு மாறாக இனம்புரியாத சோகத்தில் மூழ்கியிருந்தது.

உயிரிழந்தவர்கள், காயப்பட்டவர்கள், இருப்பிடங்களை இழந்து மரநிழலிலும் கூடாரங்களிலும் வாழ்ந்தவர்கள் ஓடி ஓடி விரட்டப்பட்டபோது சாவின் விளிம்பிற்கே வந்து நின்றவர்கள் என எம்மவரின் சோககதைகள் ஏராளம்... ஏராளம்.. இந்தச் சூழல் இன்று மாறி மக்கள் அனைவரும் அகதிமுகாம்களிலே ஏதிலிகளாக வாழ்கின்றார்கள்.

இவர்களுக்கு அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவிகள் வழங்கப்பட்டாலும் உறவுகளாகிய நாங்கள் செய்யப்போகிற உதவி அவர்களுக்கு நம்பிக்கையைத் தரும் என்று நம்புகின்றோம். எனவே தங்களினால் இயன்ற உதவியை வழங்குமாறும் அனைத்து புலம் பெயர் உறவுகளிடமும் வேண்டுகின்றோம்.

அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் கைதடி உறவுகளுக்கு உதவுவதற்கென சுவிஸிலுள்ள எமது உறவுகள் ஒன்று கூடி உதவிகளை பெறத் தொடங்கியுள்ள அதே வேளை பிரான்ஸ், லண்டன் மற்றும் நோர்வே நாடுகளிலும் இந்த உதவிகள் பெறப்பட்டு வருகின்றன.

கனடா, ஜெர்மனி, டென்மார்க், ஹொலண்ட், பெல்ஜியம் போன்ற நாடுகளிலுள்ள எம்மவர்களும் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கு கை கொடுப்பது எங்கள் கடமை என்ற அடிப்படையில் நாம் செயற்படுவோம். உதவிடுவோம் உறவுகளை காப்பதற்கு.....!

## திறமைசாலிகளுக்கு விருது

கைதடிக் கிராமத்தினை பிறப்பிடமாகக் கொண்ட திறமைசாலிகளை அடையாளம் கண்டு அவர்கள் சார்ந்த துறைகளை மையப்படுத்தி ஆண்டுதோறும் அவர்களைக் கௌரவித்து விருதுகள் வழங்குவது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கைதடியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு, சமுதாயப்பணி போன்ற பலதுறைகளில் எம்மவர்கள் பலர் சாதனையாளர்களாகவும் திறமைசாலிகளாகவும் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையிலும் இந்த துறைகளில் மேலும் பலரை உருவாக்கும் நோக்குடனும் இவ்வாறான விருதுகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படு த்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகள் குறித்து கைதடியிலுள்ள முற்போக்காளர்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இச் செயற்பாடு முழுமையடைந்த பின்னர் கைதடி நட்புறவுக்கழகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு ஐரோப்பிய மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள எம்மவர்க்கு அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நமது குரல்

# கைகொடுப்போம்!

அகாலவேளையில் எதுவுமே செய்ய முடியாத சூழலில் எமது உறவுகள் சிக்கித் தவிக்கின்றன. நீண்ட நெடும் நாட்களாக கந்தக வாடையை சுவாசித்துக் கொண்டு பிணங்களோடு மனிதர்களாக உண்ண உணவின்றி குந்தியிருக்க வீடின்றி மரநிழலிலும் கூடாரங்களிலும் அடிப்படை வசதிகளற்றும் வாழ்வதற்கான சூழலும் அற்று வாழ்ந்த உறவுகள் எல்லோருமே இன்று அகதி முகாம்களில் ஏதிலிகளாக இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு பாசத்தையும் நேசத்தையும் மனிதநேயத்தை'யும் வெளிப்படுத்தவேண்டியது நம் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் துவளும் போது சிந்தை இரங்குவத எமது மூதாதையர் எமக்கு விட்டுச் சென்ற பாரம்பரிய வழக்கங்களில் ஒன்றாகும். இயல்பாகவே இந்தப் பொறுப்புக்களை சுமக்கின்ற கடமைகளை செய்து வருகின்ற எமக்கு இன்று மேலதிகமாக வன்னியிலிருந்து புலம்பெயர்ந்த எமது உறவுகளுக்கு உதவவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட ஏனைய இடங்களில் சொத்து சுகங்களுடன் வாழ்ந்த பலர் யுத்தநிலை காரணமாக வன்னிச் சென்றனர். இன்று அங்கும் வாழ முடியாத சூழலில் வவுனியாவில் அகதி முகாம்களில் வாழ்கிறார்கள் இவர்களிலே கொல்லப்பட்டவர்கள் பலர் அவர்களுடைய விபரங்கள் எதுவும் எம்மிடம் வந்து சேரவில்லை. எனவே அங்கிருந்து தப்பி வந்த எமது உறவுகளுக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவோம்.

அகதிமுகாம்களில் நிரந்தர விமோசனமின்றி வாழும் எம்மவருக்கு உணவு,உடை உட்பட பிற உதவிகள் வழங்கப்பட்டாலும் அவர்கள் சுதந்திரமாக செலவு செய்வதற்கு கொஞ்சப் பணம் எதுவும் அவர்கள் கைகளில் இல்லை . எனவே நாம் அவர்களுக்கு இந்த உதவியை செய்தே ஆகவேண்டும்.எனவே தயவு செய்து இதனை வழங்கி எமது உறவுகளுக்கு கை கொடுக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

## சன சமூக நிலையங்களின் சிறப்பிதழ்

கைதடியிலுள்ள எங்களது சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்குஞ் மெருகூட்டும் வகையிலும் அவற்றின் பணிகளை கௌரவிக்கும் வகையிலும் அவற்றின் வரலாறு மற்றும் சேவைகளை பதிவு செய்யும் நோக்குடன் 'அகல்விளக்கு' சனசமூக நிலையங்களின் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடவுள்ளது.கைதடி ஒன்றியத்துடன் இணைந்து செயற்படும் சனசமூக நிலையங்கள் அனைத்தினதும் தோற்றம், செயற்பாடு, அதன் ஆரம்ப கர்த்தாக்கள், சிறந்த செயற்பாட்டாளர்கள், கலை இலக்கிய விளையாட்டு உட்பட்ட துறைகளில் சாதனை புரிந்தவர்கள் உட்பட்ட நிலையம் சம்பந்தமான இன்னோரன்ன விபரங்களையும், நிலையம் உட்பட இது தொட்பான நிழற்படங்களையும் எமக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.அனைத்து சனசமூக நிலையங்களின் விபரங்கள் எமக்கு கிடைத்தபின்னர் சிறப்பிதழ் தயாராகும் குறிப்பாக நிலைய கீதங்களும் அனுப்பி வைத்தல் வேண்டும்.இந்த முயற்சி வரலாற்று ஆவனமாக கருதப்படுவதால் தயவு செய்து இதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

**அகல் விளக்கு**

**வெளியீடு:**

கைதடி அபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ்

**பிரதம ஆசிரியர்**

என்.கே.ரி.

**ஆசிரியர் குழு**

மா.ஜெயந்தன்

சி.தர்சன்

ப.றொஜின்

**சுவிஸ்**

இ.சூரி

**ஜெர்மனி**

செ.கிருபா

**இத்தாலி**

வை.சண்முகநாதன்

**லண்டன்**

என்.சுனோத்

**ஹொலண்ட்**

சி.ராஜன்

**டென்மார்க்**

பூ. தர்மலிங்கம்

**நோர்வே**

கி.நமசிவாயம்

செல்வி.கோ. மதனா

**கனடா**

நா.கந்தையா

திருமதி கேதா

**அமெரிக்கா**

கந்த.ராஜலிங்கம்

**கைதடி**

சி.வே..சின்னத்தம்பி

சி.நிசாகரன்

தொடர்புகளுக்கு
K.THURAISINGAM
211 Av.Maurice
Berteaux,
78500
SARTROUVILLE
FRANCE
தொலைபேசி
06 50 65 05 11
AKALVILAKKU@
hotmail.com

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### செல்வி ரனுஜா ஜெயப்பிரகாஸ்

லண்டன் Collierswood பகுதியில் வசிக்கும் திரு திருமதி ஜெயப்பிரகாஸ் அனுலா தம்பதிகளின் செல்வப்புதல்வி ரனுஜா தனது 12ஆவது பிறந்தநாளினை 19.05.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி சாரங்கா கிருபா

லண்டன் Sutton பகுதியில் வசிக்கும் திரு திருமதி கிருபா சுகந்தி தம்பதிகளின் செல்வபுதல்வி சாரங்கா தனது 4ஆவது பிறந்த நாளினை 09.05.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி செனிரா ரவி

லண்டன் Hayes பகுதியில் வசிக்கும் திரு திருமதி ரவி ரதி தம்பதிகளின் செல்வப்புதல்வி செனிரா தனது 9ஆவது பிறந்தநாளினை 03.05.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி சசிதரன் விசானி

லண்டன் MITCHAM பகுதியில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சுனிரா தம்பதிகளின் செல்வப்புதல்வி விசானி தனது 3ஆவது பிறந்த நாளினை 29.04.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் ஆதிஸ் புலேந்திரன்

சுவிஸ்சில் Yverdon பகுதியில் வசிக்கும் திரு திருமதி புலேந்திரன் வனி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆதிஸ் தனது 4ஆவது பிறந்தநாளினை 27.04.2009 இல் கொண டாடினார்.

### செல்வன் ஆர்னேஸ் ராஜன்

கொலண்ட் Maasluis பகுதியில் வசிக்கும் திரு திருமதி ராஜன் வாகினி தம்பதிகளின் செல்வபுதல்வன் ஆர்னேஸ் தனது 1ஆவது பிறந்த நாளினை 26.04.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி சுமேகா தர்மகுலசிங்கம்

லண்டன் Mitcham பகுதியில் வசிக்கும் திரு திருமதி தர்மகுலசிங்கம் மகேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி சுமேகா தனது 8ஆவது பிறந்தநாளினை 18.04.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி யாழினி ஞானராசா

கொலண்ட் Bewerwijk பகுதியில் வசிக்கும் திரு திருமதி ஞானராசா சுகந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி யாழினி தனது 7ஆவது பிறந்த நாளினை 16.04.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் கிருசாந்த் யதுகுலன்

லண்டன் Mitcham பகுதியில் வசிக்கும் திரு திருமதி யதுகுலன் டஜானா தம்பதிகளின் செல்வப்புதல்வன கிருசாந்த் தனது 5ஆவது பிறந்தநாளினை 07.04.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் மனோ அபிசன்

சுவிஸ்சில் Basel பகுதியில் வசிக்கும் திரு திருமதி மனோ பவானி தம்பதிகளின் செல்வபுதல்வன் அபிசன் தனது 7ஆவது பிறந்த நாளினை 6.04.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி சந்திரன் சபிதா

சுவிஸ்சில் Luzern பகுதியில் வசிக்கும் திரு திருமதி சந்திரன் பிரபா (சூட்டி) தம்பதிகளின் செல்வப்புதல்வி சபிதா தனது 9ஆவது பிறந்த நாளினை 30.03.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் சந்தோஸ் மகேந்திரம்

சுவிஸ்சில் Bern பகுதியில் வசிக்கும் திரு திருமதி மகேந்திரம் கவிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சந்தோஸ் தனது 3ஆவது பிறந்த நாளினை 29.03.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி அதிசயா அசோகன்

ஜேர்மனில் Osnaburck பகுதியில் வசிக்கும் திரு திருமதி அசோகன் வசந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி அதிசயா தனது 7ஆவது பிறந்தநாளினை 25.03.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் அஜன் தயாநிதி

பிரித்தானியாவில் STOKE-ON-TRENT பகுதியில் வசிக்கும் திரு திருமதி தயாநிதி நந்தா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அஜன் தனது 1ஆவது பிறந்தநாளினை 24.03.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி ரவிதீஸ் சினேகா

### செல்வி ரவிதீஸ் மானுசா

லண்டன் Mitcham பகுதியில் வசிக்கும் திரு திருமதி ரவிதீஸ் ஜீவா தம்பதிகளின் செல்வபுதல்விகளான சினேகா தனது 8ஆவது பிறந்த நாளினை 07.03.2009 இல் கொண்டாடி மகிழ மானுசா தனது 3ஆவது பிறந்தநாளினை 13.03.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் அமுதலிங்கம் அக்சரன்

சுவிஸ்சில் Luzern பகுதியில் வசிக்கும் திரு திருமதி அமுதலிங்கம் யாசோ தம்பதிகளின் செல்வப்புதல்வன் அக்சரன் தனது 2ஆவது பிறந்தநாளினை 02.03.2009 இல் கொண்டாடினார்.

### செல்வி திவ்ஜா ஜெயேந்திரன்

சுவிஸ்சில் Zurich பகுதியில் வசிக்கும் திரு திருமதி ஜெயேந்திரன் சுயாதா தம்பதிகளின்

(7ம பக்கம் பார்க்க)

# தாய்மை!



மனித கதாபாத்திரங்களில் முக்கியமான கதாபாத்திரம் அன்னை. அந்த அன்னையின் சேவைகளை, தியாகங்களை, அர்ப்பணிப்புக்களை போற்றும் வகையில் உலகெங்கும் அன்னையர்தினம் கொண்டாடப்பட்டு வந்தாலும் மகிழ்ச்சியான இல்லங்கள் தோறும் ஒவ்வொரு நாள்களுமே அன்னையர் தினம்தான் என்பதனை நினைவிற்கொள்ள வேண்டும்.

பத்து மாதங்கள் சுமந்து பெற்றெடுத்து பெயரும் வைத்து சீராட்டி பாராட்டி சிறப்பாக எங்களை பேணிக்காத்துவரும் அன்னையின் அன்றாடக் கடமைகளுக்கு கணக்குப் போட்டுப் பார்த்தால் அதற்கு ஈடாக எதுவுமே இல்லை. ஒவ்வொரு வீடுகளிலுமே அன்னையர்கள் ஆற்றுகின்ற பணிக்கு நிகராக எந்தப் பணியையும் ஒப்பிடமுடியாது.

அன்பு, பாசம், நேசம் என்பவற்றினால் நிறைந்து காணப்படுவதுதான் தாய்மை. அந்த தாய்மையின் சேவைகள் கிடைக்காதவர்கள் எவருமேயில்லை. எனவே அவரை வணங்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும். மனித உறவுகளில் எத்தனை உறவுகள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருப்பதுதான் தாய் உறவு. தாயில்லாமல் எவருமே பிறந்திருக்க முடியாது. அதனால் அந்த உறவுக்கு அவ்வளவு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்பதனை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

அந்த தாய்மைக்கு மேலும் அணிசேர்க்கும் வகையில் அகல்விளக்கு அன்னை சிறப்பிதழாக உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது. இது தொடர்பாக நாம் கடந்த இதழில் எமது கருத்துக்களை வெளியிட்ட போது அனைத்து உறவுகளுமே தங்கள் வரவேற்பினை வழங்கி உற்சாகப்படுத்தினார்கள்.

தாயை நிரந்தரமாகப் பிரிந்திருப்பவர்களுக்கும் தற்காலிகமாகப் பிரிந்திருப்பவர்களுக்கும் இந்த இதழ் ஆறுதலாக இருக்குமென்று நம்புகின்றோம். தாயின் நினைவுகளை மீட்டுப் பார்ப்பதற்கும் அந்த உணர்வுகளில் நனைவதற்கும் இந்த இதழ் காரணமாக இருந்தால் அதுவே எமது வெற்றியாகும்.

## அன்னையின் அடிதொழுவோம்

அன்னையை வணங்குவோம்
அவர்தம் சேவையை போற்றுவோம்
உன்னை என்னை என எல்லோருக்கும்
உலகைக் காட்டியவருக்கு ஏற்றுவோம் தீபம்
தன்னையுருக்கி எமக்கு ஒளிதந்தார்
தனக்கென எதுவுமின்றி எமக்கு அளித்தார்
முன்னறி தெய்வம் முழுமுதற்கடவுள்
முப்பொழுதும் எப்பொழுதும் துதித்திடுவோம் அவரை
அன்பு பாசம் இரக்கம் அனைத்தின் வடிவம்
அகிலமெல்லாம் அவர் புகழ் பாடுவோம்
பெற்றெடுத்து பேணி வளர்த்தெடுத்தார்
பெரும் பேறாய் தூக்கி அரவணைப்பார்
கற்பதற்கு களம் அமைத்து
ஊரும் உலகும் போற்ற வழி சொன்னார்
உண்மையை பேச வைத்தார்
யாரும் எமை தூற்றுவதை பொறுக்கமாட்டார்
மாறும் இவ்வுலகில் நிதமும்
மாறாத அன்பு செலுத்துவார்
அன்னையை வணங்குவோம் - அவர்தம்
அடி தொழுவோம்.

-கேசரியார்-

## உயிர்த்தாய்




உன்னில் என்னை கருத்தாய்
உதிரம் கொடுத்து சுமந்தாய்
பூமிப்பந்தில் பிறப்பித்தாய்
பூரிப்பில் மிதந்தாய்

கண்ணில் மணியாய் கவனித்தாய்
உதிரத்தை பாலாய் ஊட்டுவித்தாய்
உண்மையின் தன்மையை போதித்தாய்
அன்பை அதனோடு சேர்தாய்

அறிவின் ஆற்றலை பெருப்பித்தாய்
பண்பையும் பணிவையும் பயிற்றுவித்தாய்
பாசத்தின் இருப்பிடம் காண்பித்தாய்
நெஞ்சினில் நேர்மையினை சேர்த்துவித்தாய்

நெருப்பையும் அதனோடு சேர்த்துவைத்தாய்
வஞ்சகமில்லாது வாழ்வித்தாய்
வையகம் மகிழ்ந்திட நேசித்தாய்
என்னில் உன்னில் உயிர்த்தாய்
எனக்கு நீதான் உயிர்த்தாய்

– வாவி. பாஸ்கர்

## மரணம்



விழுந்து கிடந்த
மனித சடலங்களுக்குள்ளிருந்து
அவன் எழுந்து கொண்டான்
எல்லாமே வெற்றுடல்கள்

சற்று முன்
உற்றார் உறவினர்கள் கூடி
கொண்டாடிய முற்றத்தில்
பிணக்குவியல்

அக்கா மகன் 31க்கு
ஆசி வழங்க வந்தோம்
அகால மரணம்

ஷெல் அடியில்
ஒருகண நேரம்

நடந்த கொடுமையை
யாரிடம் சொல்ல

– பாரிஸ் ஆனந்தன்

# தாய்மையின் சிறப்பு



உயிர்களுக்கெல்லாம் முதல் உறவாய, உயர்ந்த உறவாய் இருப்பது தாய் என்ற உறவு. தாய்க்குப் பின்னர்தான் ஏனைய உறவுகள் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்கமுடியாது. அன்பு, பாசம், தியாகம், அர்ப பணிப்பு, சேவை போன்ற வற்றுக்கு உதாரணமாக 'தாய்' என்ற உறவையே குறிப்பிட முடியும். அதனால் "தாய் சொல்லைத் தட்டாதே", "தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை", "அன்னை ஓர் ஆலயம்", "தாய்க்குப்பின் தாரம்" என முதுமொழிகளிலும் பழமொழிகளிலும் குறிப்பிட ப்படுகின்றது. கவிதைகள் மற்றும் சினிமா பாடல்களில் எல்லாம் 'தாய்' என்ற உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது.

"தாயில்லாமல் நானில்லை", "அன்னையைப்போல் ஒரு தெய்வம் உண்டோ?", "ஆசைப்பட்ட எல்லாவற்றையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா?", "அம்மா என்றால் அன்பு", "அம்மா என்பது தமிழ் வார்த்தை அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை". "அம்மாவும் நீயே அப்பாவும் நீயே", "அம்மா நீ வளர்த்த பிள்ளை", "பெற்றெடுத்து பேருமிட்டு வாழ வைத்தாய்", "பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய்வம் தெய்வம் அது பேசுகின்ற வார்த்தை என்றும் மௌனம் மௌனம்".

இவ்வாறு சினிமாவில் மட்டும் பல பாடல்கள் தாயின் மகிமையைப்பற்றி விளக்கும் பாடல்களாக அமைந்திருப்பதை காணமுடியும். அம்மா, அன்னை, தாய் என்று அழைக்கப்படும் எங்கள் அனைவரினது தெய்வத்துக்கு நிகரான தெய்வம் எதுவுமேயில்லை.

கேரிஸ்

"பத்து மாதம் சுமந்து பெற்றாளே
பகலிரவாய் பாடுபட்டு வளர்த்தாளே
வித்தகனாய் நாம் வாழ உழைத்தாளே
மேதினியில் நாம் வாழ வைத்தாளே
அன்னையைப்போல் ஒரு தெய்வம் உண்டோ
அவர் அடி தொழ மறுப்பவர் மூடரன்றோ"

என்ற கவிஞரின் பாடல்களைக் கேட்கும் போது நமது அன்னையே எம்முன்னே வந்து நிற்பார். இந்தப்பாடலிலே வரும் ஒவ்வொரு வரிகளைக் கேட்கின்றபோதும் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

"நாளெல்லாம் பட்டினியாய் இருந்திடுவாள் ஒரு நாளேனும் எம்பசி பொறுக்கமாட்டாள்" என்கிற வரிகள் அனைவரினதும் நெஞ்சைத் தொட்ட வரிகள்.

இவ்வாறு எங்களைப் படைத்துவிட்டு அன்னையின் இறுதிக்காலத்தில் அவருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் எங்களில் எத்தனை பேருக்கு கிடைத்திருக்கிறது. உண்மை யிலே அவரது அந்திமக் காலத்தில் அவருக்கு அருகில் இருந்து இவ்வுலகினை விட்டு நீங்கும்போது அனைத்துக் காரியங்களையும் செய்யும் பாக்கியம் கிடைப்பதே நாம் செய்த பெரும் பேறாகக் கருத முடியும்.

புலம்பெயர்வு மற்றும் திருமண வாழ்க்கை, வேலை போன்ற பல்வேறு காரணங்களினால் அன்னையின் அந்திமக் காலத்தில் அருகில் இல்லாமல் அவர் இறந்ததன் பின்னர் ஈமச் சடங்கில் மட்டும் கலந்து கொள்ளவேண்டிய நிலையில் பலர் இருக்கின்றார்கள். ஒரு குடும்பத்தில் ஐந்து குழந்தைகள் இருந்தால் அந்த ஐவரையும் பெற்றெடுத்து பேணிப் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டிய அனைத்துப் பணிகளையும் செய்து கல்வி கற்பித்து உரிய வயது வந்தவுடன் திருமணம் செய்து கொடுத்து அவர்களுக்கு நல்ல வாழ்வுக்கு வழி சமைத்து கொடுக்கின்றார். ஐவரையும் ஒன்றாக வைத்து வளர்த்து ஆளாக்கிய அன்னையை இறுதிக்காலத்தில் ஐவரும் சேர்ந்து பாராமரிக்கவோ அவருக்கான பணிவிடையைச் செய்வதற்கோ சந்தர்ப்ப மில்லாமற் போய்விடுகிறது. ஏனென்றால் ஐவரும் வேறு இடங்களில் வாழ்க்கை அமைத்துச் சென்று விடுவார்கள். இதனால்தான் இறுதிக் காலத்தில் அந்த அன்னையை பேணமுடியாத நிலை காணப்படுகின்றது.

எங்கள் தந்தையரின் விடயத்திலும் இப்படித்தான் நடக்கின்றது. இது எமது சமுதாய அமைப்பின் பாரம்பரிய நடப்புக்களில் ஒன்றாகப் போய்விட்டது. பெற்றெடுத்து பேணிக்காத்து கற்பித்து வைத்து ஆளாக்கியவர்களை நாங்கள் ஒருபோதும் மறக்கவும் கூடாது, கைவிடவும் அவர்களோடு பகையாகவோ அல்லது சுடுசொல் பேசுவதோ கூடாது. அவர்கள் எங்களுக்குச் செய்த உதவிகளுக்கு எங்களால் நன்றிக்கடன் எதுவும் செய்ய முடிவதில்லை. பிள்ளைகள் தமது தாய் தந்தையருக்கு நன்றி செய்ய முடியாதுவிட்டாலும் அந்த நன்றிக்கடனை தங்களுடைய குழந்தைகளுக்குச் செய்கின்ற உதவிகள் மூலம் தீர்த்துக்கொள்கின்றார்கள் என்பதுதான் எழுதப்படாத விதி. இதுதான் எமது சமுதாயத்தின் பாரம்பரிய பழக்கவழக்கமாக மேற்கொள்ளப்படும் நடைமுறையாகும்.

அன்னையின் சிறப்பை எழுதும்போதும் தந்தையைப்பற்றியும் சொல்லியே ஆகவேண்டும். ஏனென்றால் ஒரு குடும்பத்தில் அன்னையும் தந்தையும் பிரிக்கமுடியாத உறவுகள். அதனால் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று நமது முன்னோர்கள் தெரிவித்திருக்கின்றனர். "சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவம் இன்றேல் சக்தி இல்லை" என்று கூறுவதிலும் பெரும் உண்மை இருக்கிறது என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
அன்னை தந்தையே அன்பின் தெய்வம்"

என்ற பாடல் வரிகளில் அன்னை – தந்தை உறவின் மேன்மையைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது.

அன்னை என்ற உறவு அன்பு, பாசம் போன்றவற்றின் மகுடமாக இருப்பதனை விளக்கும் பாடசாலைக் காலத்தில் படித்த கதையொன்று உண்டு.

ஒரு இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணை திருமணம் செய்வதற்கு விரும்பி அவளிடம் நேரில் சென்று நான் உன்னைக் காதலிக்கிறேன். திருமணம் செய்ய விரும்புகின்றேன் என்று கூறியபோது அவள் தன்மீது கொண்ட காதலை சோதித்து பார்க்க விரும்பிய அவள் "நான் உன்னைக் காதலிக்க வேண்டுமானால் உனது அம்மாவி னுடைய இதயம் எனக்கு வேண்டும்" என்றாளாம். உடனே அந்த இளைஞன் "எப்படி அதனைக் கொண்டுவர முடியும்?" என்று ஆதங்கப்பட்டபோது "எப்படியோ கொண்டுவந்து என்னிடம் சேர். இல்லாது போனால் என்மீது கொண்ட காதலை மறந்துவிடு" என்று அவள் கூறியதை இடைமறித்த அவன் "அப்படி எதுவும் கூறாதே, நான் கொண்டு வந்து சேர்க்கின்றேன்" என்று கூறியபடி அங்கிருந்து தனது தாயிடம் சென்று தனது காதலியின் கோரிக்கையைத் தெரிவித்தான். தனது மகனுடைய மனது கஸ்டப்படக்கூடாது என்பதற்காக "எனது இதயத்தை எடுத்துச்செல்" என்று தாயார் அனுமதி வழங்கினார்.

தாயாரின் நெஞ்சாண்கூட்டைப் பிரித்தெடுத்து இதயத்தை எடுத்துக்கொண்ட இளைஞன் வேகமாக தனது காதலியை நோக்கி ஓடினான். இடையில் கால்கள் தடுக்கி கீழே விழுந்தான். அவன் எடுத்துச்சென்ற தாயாரின் இதயம் விழுந்தது. விழுந்து பலத்த நோவுடன் எழுந்த மகனைப பார்த்து தாயாரின் இதயம் "மகனே உனக்கு நொந்து போச சுதா? வலியிருக்கிறதா?" என்று கேட்டதாம்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் செய்தி தனக்கு இழப்பு வந்தாலும் தன் பிள்ளைகள் கஸ்டப்படக்கூடாது என்பதுதான் தாயின் மனது என்பதை இவ்வாறு உபகதையாக கூறப்பட்டிருக்கிறது. பெரும் துன்பம் எம்மைச் சூழ்ந்தாலும் ஊரே எம்மை வெறுத்தாலும் தாயின்

(10ம் பக்கம் பார்க்க)

# யார் பயங்கரவாதிகள்?

யாழ்ப்பாணத்தில் எனது வேலையை முடித்து வீடுநோக்கிய பயணத்தை தொடர்ந்தேன். கண்டி வீதி செம்மணி வழியூடாக நாவற்குழி வந்து சைவச்சிறுவர் இல்லம், ஆஸ்பத்திரி வயோதிபர் இல்லம், ஆயுள்வேத ஆஸ்பத்திரி எல்லாவற்றையும் தாண்டி கைதடிச் சந்திக்கு வந்து சேர்ந்து விட்டேன். இனிப் பிரச்சினையில்லை என்ற நிலையில் அங்கு சந்தித்த நண்பர்களுடன் உரையாடிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்காக மானிப்பாய் வீதியில் சென்று கொண்டிருந்தபோது தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத்துக்கு அருகில் எதிரும் புதிருமாக இரு வாகனங்கள் மோதுவது போல் முட்டிக்கொண்டன. ஒன்று வெள்ளை நிற ஹைஏஸ் வான். மற்றது இராணுவ வாகனம். வந்ததே வினை. இருவாகனத்திலிருந்து குதித்துக்கொண்டவர்கள் சரமாரியாக துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டார்கள். இடையிலே சிக்கி பலர் அல்லோலகல்லோலப்பட்டனர். ஹைஏஸ் வானில் வந்தவர்கள் இளைஞர்கள். அவர்கள் தமிழ் விடுதலைப் போராளிகள். இராணுவ வாகனம் நிறுத்தப்பட்டதும் தங்களைப் பிடித்து விடுவார்களோ என்று எண்ணியதால் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பதிலுக்கு இராணுவத்தினரும் சுட்டார்கள். ( அன்று போராளிகள் தலைமறைவாக இருந்து செயற்பட்டார்கள்.)

போராளிகள் சுட்டபடியே தங்கள் வாகனத்தைவிட்டு தப்பியோடினார்கள். சீற்றம் கொண்ட இராணுவத்தினர் பலமணி நேரம் கைதடிச் சந்தி முழுவதையும் சல்லடை போட்டு தேடியதுடன் துப்பாக்கிச் சூட்டினையும் நடத்தினார்கள். கைதடிச் சந்தியில் நின்றவர்கள், வீதியில் பயணம் செய்தவர்கள், குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என வித்தியாசம் எதுவுமின்றி தாக்கினார்கள் - சுட்டார்கள். கைதடி யூனியனிலிருந்து கைதடி தெற்கு பிள்ளையார் கோயில் வரையும் அன்று இராணுவத்தினர் கோரத்தாண்டவம் ஆடினர். பலர் பிள்ளையார் கோயிலின் தேர்முட்டிக்குள் ஒழிந்து தப்பித்துக் கொண்டனர். இந்தச் சம்பவத்தில் சிக்கிய நானும் எப்படியோ தப்பித்துக்கொண்டேன். இராணுவத்தினர் சென்று விட்டதன் பின்னர் கைதடிச்சந்தியில் மயான அமைதி நிலவியது.

கைதடிச் சந்தி மக்கள் கடையில் பலர் சூட்டுக்காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டேன். அங்கே விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மரக்கறிவகைகள் யாவும் இரத்தக்கறைகளுடன் காணப்பட்டன. இறந்தவர்களின் சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டு அன்றும் அடுத்தநாளும் கைதடி முழுவதும் சோகமயமாகிக் காணப்பட்டது. இதிலே பலியான அனைவருமே எதுவுமே அறியாத அப்பாவிப் பொதுமக்கள். அடுத்த நாள் அரச செய்திகளில் இவர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் ஆக்கப்பட்டனர



# ஆலய பிரவேசம்

“இன்றைக்கு ஏதோ பிரளயம் நடக்கப்போகுது போல கிடக்கு” நான் எங்கள் வீட்டுக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் நின்றபோது எனது உறவுக்காரப் பெண்கள் இருவர் தண்ணீர்க்குடத்துடன் இவ்வாறு கதைத்துக் கொண்டு சென்றனர். எனக்கு அப்போது 12 வயதாக இருந்தாலும் இவர்கள் பேசியதைப்பற்றி என்னால் ஊகிக்க முடிந்தது.

தேனீர்க்கடை பிரவேசம், ஆலயப்பிரவேசம் என எம்மவரால் பல போராட்டங்கள் நடத்தப்பட்ட காலம். இன்று எமது உறவினர்கள் எல்லோரும் வழிபட்டுவரும் முருகன் ஆலயப்பிரவேசம் நடைபெறவிருந்ததையும் அதனைத் தடுக்க கோயில் முதலாளிகள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளால் எங்களுக்கும் அவர்களுக்கும் மோதல் வெடிக்கலாம் என்பதே அந்தப் பெண்களின் பேச்சின் காரணம் என்பதனைக் கண்டுபிடிப்பதற்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

எங்களுடைய சனசமூக நிலையத் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாகிகள் என அனைவரும் வேட்டி சால்வை அணிந்து அர்ச்சனைத் தட்டுகளுடன் ஆலயம் நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். எனது சிறிய தந்தையார் எனக்கு அளவான வேட்டி சால்வையைத் தந்து என்னையும் ஆலயத்திற்கு வருமாறு அழைத்தார். நானும் குளித்து தோய்த்துலர்ந்த ஆடைகள் அணிந்து அர்ச்சனைத் தட்டுகளுடன் புறப்பட்டேன். ஆலயக் கிணற்றடியில் நான் தயங்கித் தயங்கி நின்றபோது சிறிய தந்தையார் “என்ன தயக்கம்” என்றவாறு கிணற்றுவாளியை எடுத்து தண்ணீரை அள்ளி கால்களையும் அர்ச்சனைப் பொருட்களையும் கழுவச் சொன்னார்.

இந்தக்கிணற்றில் நாங்கள் தண்ணீர் அள்ளிக் குடிப்பதற்கு தடையிருந்தது. அருகிலுள்ள கூட்டுறவுச் சங்கத்துக்கு நாங்கள் செல்லும் வேளையிலும் முருகன் கோயில் திருவிழாக் காலங்களிலும் நாங்கள் இந்தப் பகுதிக்கு வந்தால் - இந்தக் கிணற்றில் தண்ணீர் குடிக்க வேண்டுமென்றால் வேறு ஆள்கள் வந்து அள்ளி ஊற்றும்வரை காவலிருக்க வேண்டும்.

இன்று ஆலயப்பிரவேசம் நடைபெறுவதால் தண்ணீர் எடுப்பதற்கு இருந்த தடையும் விலக்கப்பட்டிருக்கிறது என்பதனை ஊகித்துக்கொண்டேன்.

நாங்கள் ஆலயத்துக்குள் செல்வதை வெளியால் பலர் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். “இவங்களை கோயிலுக்கை விடக்கூடாது – அதனை தடுக்க வேண்டும்” என்ற ஆர்வத்தை அவர்களின் முகம் காட்டிக்கொண்டிருந்தது. ஆனால் அவர்களால் எதுவுமே செய்யமுடியாமற் போய்விட்டது. நாங்கள் உள்ளே நுழைந்தபோது ஆலயக்குருக்களும் கோயில் முதலாளியும் வரவேற்று அழைத்துச்சென்றனர்.

அன்று தொடக்கம் எம்மவர்கள் அந்த ஆலயத்தின் உள்ளே சென்று பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டாலும் இன்னும் சில தடைகள் எம்மவருக்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

13.08.1972



அநாதை இல்லம் அமைதியாக இருந்தது. அன்றைய காலை உணவு அங்குள்ள எல்லோருக்கும் பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தது. அனைவரும் அமைதியாக இருந்து இறைவனை வேண்டிக்கொண்டு உணவு உண்பதற்குத் தயாரானார்கள். அந்த இல்லத்திற்கு முன்பாக ஆட்டோ வண்டி ஒன்று வந்து நின்றது. இல்லத்தின் பொறுப்பாளர் உள்ளேயிருந்து வெளியே எட்டிப் பார்த்தார். ஆட்டோவிலிருந்து ஒரு வயதுபோன அம்மாவும் இளைஞர் ஒருவரும் இறங்கி வந்தனர்.

அவர்கள் இருவரையும் எங்கோ பார்த்ததுபோல் இருந்தது இல்லப்
பொறுப்பாளருக்கு. எனவே இருவரையும் தமது அறைக்கு அழைத்துச்சென்றார். அவர்களை அமரச்செய்து அவர்களின் வருகை பற்றி விசாரித்தார்.
"இவர் எனது அம்மா. வயது 78. இந்த இல்லத்தில் சேர்ப்பதற்காக கூட்டி வந்திருக்கின்றேன்" என்று அந்த இளைஞர் கூறினார். "அம்மாவை எனக்கு அறிமுகமானவர்போல் இருக்கிறதே" என கண்ணாடியை நீக்கி அம்மாவை உற்றுப்பார்த்தபடி பொறுப்பாளர் கூறினார். உடனே சைகையால் அதைக் கூறவேண்டாம் என்று அம்மா கூறினார்.

முறைப்படி பதிவுகள் இடம்பெற்று விசாரணைகள் முடிவடைந்து அம்மா இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அம்மாவை அங்கே சேர்த்துவிட்ட மகிழ்ச்சியில் மகன் வெளியேறிவிட்டான். அவன் வெளியே வந்து "ஒரு கரைச்சல் தீர்ந்தது. இனிமேல் நானும் மனைவியும் மகிழ்ச்சியாக வாழலாம். இந்த மனிசி வீட்டிலிருந்தால் எந்த நேரமும் கரைச்சல்தான். மனைவியோடு சந்தோசமாக இருக்கமுடியாது. இனிமேல் கொண்டாட்டம்தான்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு வீடுநோக்கிப் புறப்பட்டான்.

"அம்மா நீங்கள்" என இல்லப்பொறுப்பாளர் வாய் திறந்தபோது அதனைத் தடுத்து நிறுத்திய அம்மா "நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று தனது கதையை ஆரம்பித்தார். "25 வருடங்களுக்கு முன் இந்த இல்லத்திலிருந்து தத்தெடுத்த குழந்தை இன்று வளர்ந்து பெரியவனாகி தனக்கென ஒரு துணையைத் தேடிக்கொண்டு என்னை புறக்கணித்து இங்கே கொண்டு வந்து விட்டுட்டு போயிட்டான்" எனத் தொடர்ந்தார்.

"இந்த இல்லத்திலிருந்துதான் தன்னை தத்தெடுத்தது என்று அவனுக்குத் தெரியாதா?" பொறுப்பாளர் தனது சந்தேகத்திற்கு விடை தேடினார்.
"இல்லை. அவனை தத்தெடுத்து வளர்த்த கதையை நான் சொல்லவில்லை அவன் நிம்மதியாக வாழ்ந்தால் போதும் அதுவே எனக்கு மகிழ்ச்சி அந்த மகிழ்ச்சியில் எனது சீவன்போய்விட வேண்டும்" என அம்மா கூறியபோது தாய் மனதை எண்ணி பொறுப்பாளர் ஆச்சரியப்பட்டார். - சிங்கன் -

# தகவல் தொழில்நுட்பத்தில் இணையத்தின் வளர்ச்சிப்பாதை

சர்வதேசத்தில் தகவல் தொழில்நுட்பம் உலகமே வியக்குமளவுக்கு பெருவளர்ச்சி கண்டுள்ளது. இந்த வளர்ச்சியின் விளைவாக நாளொரு வண்ணமும் புதுப்புதுகண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. தகவல் தொழில்நுட்பம் என்பது தகவலை பரிமாறுவதற்கும் பயன்படுத்துவதற்குமான அடிப்படை தொழில்நுட்பங்களைப் பற்றியதாகும். முக்கியமாக மின் கணனிகள், கணனி நிரல்கள் ஆகியவற்றின் உதவியுடன் தகவலை எங்கும், எப்பொழுதும் சேமிக்கவும், மீட்கவும், பாதுகாக்கவும், மாற்றவும், அனுப்பவும், பெறவுமாக பயன்படுத்துவதாகும். தகவல் தொழில்நுட்பத் துறையினுள் கணினி அறிவியல், கணினி வலையமைப்பு, தகவல் அறிவியல், தகவல் பாதுகாப்பு இணையம், மின்நூலகம், தரவு மேலாண்மை போன்ற பல்வேறு பிரிவுகள் உள்ளடங்குகின்றன.
இவ்வகையில் இணையத்தின் கண்டுபிடிப்பானது தகவல் தொழில் நுட்பத்தில் பெரும் புரட்சி மட்டுமல்லாமல் தனி மனித வாழ்வியலையே ஒரு மிகப்பெரிய தோற்றத்திற்குள் ஆக்கிரமித்துக்கொண்டு வருகின்றது. 1957 இல் சோவியத் ஒன்றியம் "Sputnik" என்ற செயற்கை கோளை அனுப்பி வெற்றி கொண்டபின் அதற்குப் போட்டியாக ஐக்கிய அமெரிக்கா ஒரு இராணுவ ஆராய்ச்சி மையத்தை ஆரம்பித்தது (ARPANET). இந்த அமைப்பானது பல்வேறுபட்ட இராணுவ ஆய்வின் ஓர் அங்கமாக 1962-1969 இடைப்பட்ட காலப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது தான் இணைய தொழில் நுட்பமாகும். இணையம் பல பரிமாணங்களில் பரிணாமம் அடைந்த வரலாற்றை பல நூறு பக்கங்களில் சொல்லும் அளவில் அதன் சாதனை விரிந்துள்ளது. இருந்த போதிலும் இந்த தகவல் தொழில் நுட்பத்தின் எதிர்கால வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்பது எதிர்வு கூறமுடியாத போதிலும் இதுவரை காலமும் கடந்து வந்த பாதையை ஆண்டு ரீதியாக குறிப்பிடத்தக்க சில வரலாற்று நிகழ்வுகளுடன் கீழே மீட்கலாம்.

- 1969- இரு கணனிகளுக்கிடையில் "log-in" என்ற சொல்லே முதலில் அனுப்பி பரீட்சிக்க ப்பட்ட செய்தியாகும்.
- 1971- முதலில் 23 இணைய இணைப்பு மூலமாக மிக பிரபல்யமான பல்கலைக்கழகங்களை இணைத்தனர்.
- 1972- பொதுமக்களுக்காக முதல் முறையாக இந்த தொடர்பு சாதனம் இயக்கி காட்டப்பட்டது. இதே ஆண்டு ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த விஞ்ஞானி முதலாவது e-mail ஐ உடன் வடிவமைத்து வெற்றி கொண்டார்.
- 1973- ARPANET ஆனது DARPA என பெயர் மாற்றம் செய்ததோடு இணையம் பற்றிய பலரது கருதுகோள்கள் உயிரூட்டம் பெற்றது. இணைய தொடர்புகளுக்கான நியம கடைப்பிடிப்புக்கள் உருப்பெற்றன (TCP/IP).
- 1974- இணைப்புகள் 100 எண்ணிக்கையாக அதிகரித்தது.
- 1976- இல் முதலாவது மின்-அஞ்சல் (e-mail) பிரித்தானிய மகாராணியினால் அனுபப்பட்டது மட்டுமல்லாமல் இவரே முதலில் மின் அஞ்சல் அனுப்பிய அரச தலைவருமாவர்.
- 1982- முதல் முதலாக "internet" சொற்பிரயோகம் பிறந்ததுடன் டொற் (.) என்ற குறியீடு இணைக்கதொடங்கப்பட்ட வருடமாகும்.
- 1984- இணையதள பெயர் பதிவு முறை (DNS)

(12ம் பக்கம் பார்க்க)

# முத்தமிழ்

இயல், இசை, நாடகம் என்ற கருத்தினையே சான்றோர்கள் முத்தமிழ் என கூறுகின்றனர். முத்தமிழ் வித்தகராக விபுலானந்த அடிகள் போற்றப்படுகின்றார்.

தமிழர்கள் படித்து சுவைத்திட முத்தமிழை முக்கனிச்சாறுக்கு உவமிக்கின்றனர். தமிழின் பெருமையும் தமிழ் இசையின் பெருமையையும் யாழ் எனும் பழந்தமிழ் இசைக்கருவியின் பெருமையையும் உலகம் அறியச்செய்திட நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

சங்ககாலங்களில் இயல், இசை, நாடகத்துறையில் முன்னோடிகளாக திகழ்ந்த புலவர்களுக்கு பரிசுகளும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டது.

இசைத்துறையை இனிய ஓசையுடன் வளர்த்திட நாம் நல்ல அறிஞர் நூல்களை கற்றிட வேண்டும். இசை உலகை பெரிதும் ஊக்குவித்திட நாம் பங்கு கொள்ள வேண்டும்.

கல்விப்பணிகளோடு ஈடுஇணையற்ற முத்தமிழை கற்றிட நமது மாணவர்கள் நாட்டம் கொள்வதன் மூலம் நமது சமுதாயம் முன்னேற முடியும். இதற்கு உதாரணமாக விபுலானந்த அடிகளாரை குறிப்பிடலாம்.

நாடகத்துறையில் புராணம் வடமோடி நாட்டுக்கூத்து எனப் பலவகை உண்டு. இத்துறையிலும் மாணவமணிகள் இணைந்து கொள்வதன் மூலம் நாடகத்துறை வளர்ச்சியடையும். முத்தமிழை விருத்தியடையச் செய்ய நாம் அனைவரும் பங்காளிகள் ஆவோம்.

**சிறீதரன் பிரியங்கா**

## அகல்விளக்கு உறவுகளுக்கு அன்பான வேண்டுகோள்

அகல்விளக்கு உரிய நேரத்தில் தங்கள் கரங்களுக்கு கிடைப்பதில்லை என்று பல உறவுகள் நேரிலும் தொலைபேசி மூலமும் எங்களிடம் முறையிட்டுள்ளனர். எனவே எமது உறவுகளின் நன்மை கருதி பத்திரிகை வெளியான உடனேயே உங்கள் கரங்களில் கிடைப்பதற்கு உங்கள் இல்லங்களுக்கு அதனை நேரடியாக அனுப்பி வைப்பதற்கு முடிவு செய்துள்ளோம். தங்கள் வீட்டு முகவரியுடன் தபால் கட்டணத்தையும் அனுப்பி வைத்தால் அகல்விளக்கு உடனடியாகவே உங்கள் கரங்களுக்கு கிடைத்துவிடும்.

தங்கள் வீட்டுமுகவரிக்கு அகல்விளக்கு வந்து சேர்வதற்கான தபால் கட்டணத்தை தாமதமின்றி அனுப்பி வைக்கவும். அடுத்த இதழ் தானாகவே வந்து சேரும்.

எங்கள் கிராமத்து நினைவுகளை சுமந்துவரும் அகல்விளக்கு, உங்கள் வீடுதோறும் இருக்கவேண்டிய பொருட்களில் ஒன்றாக நீங்கள் கருதுவீர்களேயானால் நாங்கள் அதற்கு தடையாக இருக்கமாட்டோம். விடைகொடுப்போம், விரைந்து உங்களுக்கான தபால் கட்டணங்களை அனுப்பி வைப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியபீடம்
அகல்விளக்கு

## அகல் விளக்கு அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணத்தினால் அகல் விளக்கினை உரிய நேரத்துக்கு வெளியிட முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

தொடர்ந்து வரும் இதழ்கள் உரிய காலத்தில் வெளியிடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்

அகல் விளக்கு
– ஆசிரிய பீடம்

# குணாவின் குறிப்புகள்

தாயக மண்ணின் அவலங்கள் புலம் பெயர் எம்மவர் வாழ்வில் பலவித உணர்வுப் போரட்டங்கள் வாயிலாக அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் எத்தகைய மாற்றம் ஏற்படுமோ? என்ற கவலையுடனே புகலிட வாழ்வு நகர்கிறது.

நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் அபரித வளர்ச்சியில் அள்ளுண்டு கேட்டலிலும், பார்த்தலிலும், தொலைபேசலிலும் காலம் கரையும் வேளையில் அகல் விள்க்கு நான்காவது இதழ்பரப்பி விரிகிறது.

அந்நிய மண்ணின் ஒட்டாத கால்களுடன் தசாப்தங்கள் கடக்க வளரும் அடுத்த தலைமுறையின் வழிகாட்டலில் வரலாற்று ஓட்டத்தின் இடறும் மனப்பாரம் அழுத்த கரையும் வாழ்வு. இந்நிலையில் அகல் விளக்கு அன்னையர் சிறப்பிதழாக தாய்மையை சிறப்பிக்கும் இதழாக வெளியிடப்படுகிறது. சென்ற வருடம் கனடா வாழ் எம் உறவுகளின் ஆதரவில் எமது கிராமத்தில் முதியோர் கௌரவிப்பு என்ற நிகழ்வு மேற் கொள்ளப்பட்டது. இதில் பங்களிப்பு செய்த அனைத்து நல்ல உள்ளங்களையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றிகளையும் இச்சிறப்பு மலரூடாகத்தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் தலைமுறை இடைவெளி எம்மவர்களிடையே பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். இவ்வேளையில் தமது பிள்ளைகள் கல்வியில், கலையில் பிறவிடயங்களில் பெருமை சேர்த்த அவர்களின் வாழ்வில் பிள்ளைகளால் வாழும் போதே கௌரவிக்கப்படுவது என்பது அவர்கள் எமது வளர்ச்சிக்காக அனுபவித்த கஸ்டங்களுக்காக நாம் செய்யும் சிறு மரியாதை இந்த வகையில் எமது அன்னையர்களை கௌரவிக்கும் ஒரு முயற்சியாக இந்த இதழ் வெளியிடப்படுகிறது. தாயைப்பற்றி குறிப்பிடுவதனால் பக்கம் பக்கமாக எழுதலாம். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் கருவிலிருந்து இறுதி வரை தாயின் தாக்கம் இல்லா எவரும் வாழ்ந்திட முடியாது.எந்த மனிதனிடம் நீங்கள் கண்டு வியந்த பெண்மணி யார்? என கேட்டால் அவரவர்களின் தாயைத்தான் குறிப்பிடுவார்கள் கருவிலேயிருக்கும் போது தாயின் மனதில் ஏற்படும் தன்னம்பிக்கை தான் பிள்ளைபிறந்த பிறகு அவர்கள் மனதில் தன்னம்பிக்கையுடன் பல வித சாதனைகளைச் செய்யத்துண்டுவதாக விஞ்ஞான பூர்வமாக நிருபிகக்கப்பட்டுள்ளது. தாய் மொழி, தாய்மண், தாயகம் என்று சொற்றொடர்கள் தாய் வழி சமுக அமைப்பின் வழி வந்தமையே குறிப்பிடுகிறது. தாயின் வழி தாய் என்று முந்திய சந்ததியினை தேடிச்சென்றால் சந்ததியின் தொடக்கம் என்பது பொதுவுடைமையாக வேயிருக்கும் அறிஞர்கள் குறிப்பிடுவர். வள்ளுவர் முதல் இன்றைய கவிஞர்கள் வரை தாய்மையின் புகழைப்பற்றி எழுதாதவர்கள் இருக்க முடியாது.

(8ம் பக்கம் பார்க்க)

## பிறந்த நாள் வாழ்த்து............

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பதிகளின் செல்வப்புதல்வி திவ்ஜா தனது 10ஆவது பிறந்தநாளினை 28.02.2009 இல் கொண்டாடினார்.

### செல்வன் கவிசன் நாகேஸ

லண்டன் Wimbledon பகுதியில் வசிக்கும் திரு திருமதி நாகேஸ் சாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கவிசன் தனது 1ஆவது பிறந்தநாளினை 21.01.2009 இல் கொண்டாடினார்.

**பிறந்த நாள் கொண்டாடும் அனைத்து மழலைச்செல்வங்களை கல்வியோடு அனைத்தும் பெற்று வாழ அகல்விளக்கு குடும்பம் வாழ்த்துகிறது.**

## இளவயது

இனிமையான இரவுகள்
இளமையான கனவுகள்
விழித்தெழுந்து பார்த்தால்
அறுத்தெறியும் உணர்வுகள்

கனவில் உன்னை
சந்திக்கின்றேன்
கற்பனையில் உன்னோடு
வாழ்கின்றேன்
நிஜத்தில் உன்னை
சந்திப்பதெப்போது?
நாம் நிம்மதியாய்
வாழ்வதெப்போது?

காலம் கடக்கிறது
காமம் மறைகிறது
ஊற்றெடுத்த நெஞ்சு
இன்று ஊனமுற்றிருக்கிறது
உன் வரவைப் பார்த்து

குயில்

## கைவிளக்கு

திரி தின்னும் நெய் விளக்கல்ல
எம் திறமையின் கைவிளக்கு
அகலட்டும் அதன் சுவாலைகள்
உடன் ஆனந்த தாண்டவம் ஆட
இதில் தொப்பளிக்கும் உண்மையில்
எண்ணெயை ஊற்று
எம்முள் சோர்ந்திருக்கும்
காலத்தின் தேவைகள் மூழும்
வாழ்விழந்து
வாழ்வியல் வழிமறந்து
அகதியென்ற போர்வைக்குள்
சகதி வாழ்வு வாழ்கின்ற
எம்மினத்தின் கண்ணீரை மொண்டு
அலைதட்டும் கலங்கரை விளக்கு
துயில்பாட நேரமில்லை
துவண்ட எம் தோள்களுக்கு
பறைசாற்றி உரமூட்டும் அகல்விளக்கு
நடுவான் பிளந்தாலும்
இடிவந்து வீழ்ந்தாலும்
முடியாத இனமென்று
முரசொலித்து சதிராடும் விடிவிளக்கு
தொட்டால் சுடுமல்ல
உள்ளுணர்ந்து கற்றால்
உள்ளுணர்வை சுடும்
வாழ்நிலம் கருதி தத்தளிக்கும் எம்மவரை
வா கரைக்கு என
வசப்படுத்தும் அகல்விளக்கு
எம் சந்ததியின் சங்கடத்தை
திரையகற்றும் ஒளிவிளக்கு
விழுதுவிழ ஆணிவேர் உறங்குமா?
எம் சரித்திரத்தின் சாயல்களை
எடுத்துரைக்கும் அகல்விளக்கு
எம் பரப்புரையின் வரப்புரையை
இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் ஒருவிளக்கு
அதுவே எம் அகல்விளக்கு.

லண்டன் புவி

## என் அம்மா

கருவறை என்பது இறைவன் இருப்பிடம்
என்னை அங்கே
முதன்முதல் குடியமர்த்தியவர் அம்மா!
உயிருக்கும் மெய்க்கும் உயிர்மெய் தந்து
முத்தமிழ் ஊற்றை தன்
முலைப்பாலில் ஊட்டியவர் என் அம்மா
பாலூட்டி தாலாட்டி சீராட்டி
பூவிட்டு பொட்டிட்டு
ஆத்திசூடி சொன்னவள் அம்மா
காற்றிலாடும் பட்டம் நான்
வான்வரை தூக்கிச் சென்றவள் அம்மா
சும்மா சொன்னால் தித்திக்குமா என் தமிழ்
கண் கண்ட தெய்வம்
கருணையின் வடிவம்
ஒப்பிட்டுப் பார்த்தால்
அம்மா போல் ஒரு தெய்வம் இல்லை
அம்மா நாமமே
உலகத்தின் ஒலிப்பு.

லண்டன் புவி

## அம்மா

அம்மா என்றால் அன்பு
அம்மா என்பது தமிழ் வார்த்தை
அதுதான் பிள்ளையின் முதல் வார்த்தை
அம்மா வாழ்க
அம்மாக்கள் வாழ்க


கு.அட்சயன்

## குணாவின் குறிப்புக்கள்....(7ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸ்ய எழுத்தாளர் மார்க்சிம் கார்க்கியால் தாய் என்ற நாவல்பல மொழிகளிசல் பதிப்பாகியுள்ளது. மக்கள் புரட்சி காலத்தில் அப்புரட்சிக்காக ஒருதாய் செய்த தியாக வரலாறு இந்நாவல் கலைஞரின் திரைக்கதை வசனத்தில் கவிஞர் விஜய் கதா நாயகனாக நடிக்க திரைப்படமாக தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நாவலில் இடம் பெற்ற தாயின் சிறப்புகளுடன் எம்மண்ணி ஈழப் போரட்ட வரலாறு பல தாய்மார்களை உருவாக்கியிருக்கிறது. இவர்களின் தியாகங்களை குறிப்பிடுவதற்கு வார்த்தைகளே இல்லை அவ்வளவிற்கு போராட்டத்திற்காக பங்களிப்பைச் செய்த பல தாய்மார்களை நாம் பார்த்திருக்கிறோம்.

ஈன்ற மொழதில் பெரிது வார்க்கும் தன் மகனைச்சான்றோன் எனக்கேட்ட தாய் என்பது குறள் தங்கள் பிள்ளைகள் பல சாதனைகளைச்செய்து பெருமையைச் சேர்ப்பதை பார்க்கும் போது பிள்ளை பெற்றதன் பெருமையை தாய் உணர்ந்து கொள்வதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார். கவிஞர் வைரமுத்து தனது அம்மாவிற்காக எழுதிய கவிதையில் என்னைவிட்டால் வேறு பிள்ளை உண்டு உனக்கு, உன்னை விட்டால் வேறு யார் உண்டு எனக்கு என்று வருந்தி கூறுவார். இவ்வுணர்வு அனைவருக்கும் பொதுவானதே.
அன்னை தெரேசா, அன்னை பூபதி என்ற பெயர்கள் பொது வாக அனைவராலும் தியாகத்தாலும், சேவையாலும் அனை வரது உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்றவை என்றால் மிகையாகாது.

தொடர்வேன்
குணா



# சிறுவர் முற்றம்

## ஆத்திசூடி பயில்வோம்

1. அறம்செய விரும்பு – தர்மம் செய்ய ஆவல் கொள்
2. ஆறுவது சினம் – கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்
3. இயல்வது கரவேல் – உன்னால் கொடுக்கக்கூடிய பொருட்களை ஒளிக்காது கொடு
4. ஈவது விலக்கேல் – ஒருவர் மற்றவருக்கு கொடுப்பதை வேண்டாம் என்று தடுக்காதே
5. உடையது விளம்பேல் – உன்னிடத்தில் உள்ள பொருளை அல்லதுஇரகசியங்களை பிறர் அறியுமாறு கூறாதே
6. ஊக்கமது கைவிடேல் – எப்போதும் முயற்சியைக் கைவிடாதே
7. எண்ணெழுத் திகழேல் – கணித, இலக்கண நூற்களை தள்ளாது நன்கு கற்க வேண்டும்
8. ஏற்ப திகழ்ச்சி – இரந்து வாழ்வது இழிவானது
9. ஐயமிட்டு ண் – பிச்சை கேட்பவருக்கு பிச்சையிட்டு பிறகு உண்
10. ஒப்புர வொழுகு – உலக நடைக்கு ஏற்றவாறு அதனுடன் பொருந்தி வாழ்
11. ஓதுவ தொழியேல் – நல்ல நூல்களை எப்பொழுதும் படி
12. ஔவியம் பேசேல் – பொறாமையான சொற்களை பேசாதே

தொகுப்பு - நட்ஷத்திரன் (சுவிஸ்)

## ஐவகை நிலங்கள்

மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்

முல்லை – காடும் காடுசார்ந்த இடமும்

நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்

குறுஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்

பாலை – மணலும் மணல்சார்ந்த இடமும்

**மாணவ மணிகளே !**
**உங்கள் ஆக்கங்களை இப்பகுதி**
**யிலே எதிர்பார்க்கின்றோம். உங்கள் ஆக்கங்களை**
**எமது** akalvilakku@hotmail.com **என்ற**
**மின்னஞ்கல் முகவரிக்கோ**
**அல்லது எமது பத்திரிகை முகவரிக்கோ நேரடியாக**
**அனுப்பிவையுங்கள்**

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
3. இரக்கப்போனாலும் சிறக்கப் போ
4. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்
5. எலிவளையானாலும் தனிவளை வேண்டும்
6. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்
7. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
8. கற்கையில் கல்வி கசப்பு கற்றபின் அதுவே இனிப்பு
9. கற்றது கைமண் அளவு கல்லலாதது உலகளவு
10. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்
11. கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானாக வரும்
12. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
13. காலம் போகும் வார்த்தை நிற்கும்
14. காலைச் சுற்றின பாம்பு கடியாமல் விடாது
15. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
16. குப்பையில் போட்டாலும் குண்டுணி மங்காது
17. கெடுவான் கேடு நினைப்பான்
18. கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா
19. சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்
20. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
21. சிறுகக்கட்டி பெருக வாழ்
22. தன்வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா
23. தன் கையே தனக்கு உதவி
24. தன்வினை தன்னைச் சுடும்
25. தன் பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்
26. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
27. நீருள்ள மட்டும் மீன் துள்ளும்
28. பனங்காட்டு நரி சலசலப்பிற்கு அஞ்சாது
29. பார்த்தால் பசு பாய்ந்தால் புலி
30. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு
31. விளையும் பயிரை முளையிலே தெரியும்
32. வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும்
33. வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி
34. சுவரிருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்
35. தினை விதைத்தவன் தினை அறுப்பான்

தொகுப்பு - மாலா மணாளன் ( அமெரிக்கா )

## சர்வதேச தினங்கள்

மார்ச் 8 – சர்வதேச மகளிர் தினம்
மார்ச் 15 – ஊனமுற்றோர் தினம்
மார்ச் 22 – சர்வதேச குடிநீர் தினம்
ஏப்ரல் 7 – சர்வதேச சுகாதார தினம்
ஏப்ரல் 23 – புத்தக தினம்
மே 1 – தொழிலாளர் தினம்
மே 8 – செஞ்சிலுவைச் சங்க தினம்
மே 17 – தகவல் தொடர்பு தினம்
மே 27 – அன்னையர் தினம்
மே 31 – புகையிலை மறுப்பு தினம்
ஜூன் 5 – சுற்றுச் சூழல் தினம்
ஜூன் 26 – போதை மருந்து மறுப்பு தினம்
ஜூலை 11 – உலக சூழல் தினம்
ஜூலை 28 – அகதிகள் தினம்
செப்ரெம்பர் 8 – எழுத்தறிவு தினம்
செப்ரெம்பர் 16 – ஓசோன் தினம்
செப்ரெம்பர் 27 – சுற்றுலா தினம்
ஒக்ரோபர் 1 – முதியோர் தினம்
ஒக்ரோபர் 3 – குடியிருப்பு தினம்
ஒக்ரோபர் 4 – விலங்கு நலன் தினம்

## அம்மா நலமா?

அம்மா நலமா?
உன் ஆத்மா துடிக்கும் ஓசை
என் செவிகளில் ஒலிக்கிறது
இதயம் கனக்கிறது
விழிகள் பனிக்கிறது
வழிகள் திறந்திருந்தால்
வருவேன்
அதுவரை பொறுத்திருங்கள் அம்மா

அம்மா உங்கள்
அன்பு முகத்தை
ஒரு தடவையேனும்
காணமுடியாது போய்விடுமோ
என்று
வெம்பும் என் இதயம்
கதறியழ முடியாமல்
மௌனித்து மரணிக்கிறது

அம்மா
நீண்ட நெடும் நாள்களுக்குப் பின்னர்
இம்மடல் எழுதுகின்றேன்
அந்நிய மண்ணில் அடிமைகளாய்
புரியாத மொழியும்
அறியாத மனிதர்களும்
நடுங்கும் குளிர் என
நடைப்பிணமாய் வாழ்கின்றேன்

உங்களோடு வாழ்ந்த
பொழுதுகளை தேடுகின்றேன்
தூக்கத்தை விற்று
வரண்டு போன முகங்களில்
வர்ணம்பூசி வாழ்கின்றோம்
அல்லும் பகலும்
அடிமைகளாய் உழைத்து
கிடைக்கும் ஈரோக்கள்
கைகளில் நிறைந்தாலும்
மனதில் நிறையவில்லை
புகலிடம் கேட்டோம்
வதிவிடம் தந்தனர்
வீடு வசதிகள்
ஆடம்பரகார் என
எல்லாமே இருக்கிறது
ஆனால் நிம்மதியில்லை
நீளும் வாழ்வில் எது நிலையானது?
என்முகம் காணாமல்
அழுவதும் ஏங்குவதும்
எனக்குப் புரிகிறது
கலங்காதே தாயே
ஒருதடவையேனும்
வருவேன் உங்களிடம்
அதுவரை
பொறுத்திருங்கள் அம்மா!

- பாரிஸ்
ஆனந்தன்

## அன்புள்ள.......

பள்ளிப்பருவத்தில்
பனிதூவும் வேளையில்
பாவை நீ வருகையில்
பாவி நான் பார்ப்பதற்கு ஏங்குவேன்

பதினெட்டுக் கடந்து
பரிவோடு என்னை
பைங்கிளி நீ பற்றுவாயென
பகல்கனவில் காத்திருந்தேன்

பார்த்துப் பார்த்து என்விழி
பலமிழந்து போனதடி – நீயோ
பணமென்னும் மாயையால் - என்னை
பரிதவிக்க விட்டாயடி

இத்தனையும் எழுதுகின்றேன்
இனி என்னை நீ புரிவதற்கல்ல
இருப்பவர்களை நீ புரிவதற்கு
இப்படிக்கு உன்னைப் புரிந்து கொண்ட

- றொஜின்

## காதலர் தினம்

காதலர் தினமன்று
காத தூரம் நான் சென்று
காதலிக்காய்
கடற்கரையில் காத்திருந்தேன்
காதலி வரவில்லை
காதலர்கள் வந்தார்கள்
காமமும் மோகமும் நிறைந்த
காதல்தான்
கண்ணுக்குத் தெரிந்தன
கவ்விக் கடித்து
கணநேர முத்தத்தின் பின்
சாதனைக்காய் கின்னசில்
இடம்பெறுவதும்
நம் ஊரில் கட்டாக்காலி
நாய்கள் வலம்வருவது போலும்
காதலை காயப்படுத்தாதீர்கள்
காதலை காதலியுங்கள்
கல்யாணத்தில் முடியுங்கள்

- குயில்

## பால்முகம்

பசுமையின் சோலையில்
பௌர்ணமி நிலவில்
மழலையின் சிரிப்பில்
பூக்களின் மிடுக்கில்
மார்கழிப்பனியில்
நான் காண்பதெல்லாம்
உன் பால் முகத்தைத்தான்

- குயில்

## சொர்க்கம்

நீ சொல்வது போன்று
நான் இறந்து
சொர்க்கம் செல்வேன்
என்று நம்புபவனில்லை

ஏன் என்றால்
நான் பிறந்ததும்
சொர்க்கத்திலிருந்து

உறங்கி தவழ்ந்து
வளர்ந்ததும் சொர்க்கத்தின்
மடியில் - ஆம்

தாயின் கருவறையும்
சொர்க்கம்தான்
தாயின் மடியும்
சொர்க்கந்தான்

இதைவிட ஒரு
சொர்க்கம் உண்டு
என நான் நம்பவில்லை

-மா.ஜெயந்தன்

## அறியாமை

மனிதா
ஐந்து அறிவு கொண்ட
பசுமாட்டின் கழிவைக்கூட
கடவுளாகக் கும்பிடும் நீ

ஆறறிவு படைத்த சக
மனிதனை தீண்டத்தகாதவன்
என்கிறாயே

உன் அறியாமையை
பார்த்து பரிதாபப்படுவதைவிட
வேறு என்ன செய்ய
முடியும் - இந்த
இருபத்தோராம் நூற்றாண்டில்

-மா.ஜெயந்தன்

உலகெங்கும்
கொண்டாடப்படும்
அன்னையர்
தினத்தை
முன்னிட்டு இந்த
சிறப்பிதழ்
அன்னையர்
தின
சிறப்பிதழாக
(அகல் விளக்கு)
உங்கள்
கரங்களில்
தவழ்கின்றது

## தாய்மையின் சிறப்பு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)
மடியில் தலை வைத்தால் போதும் அந்தத் துயரம் தானாகவே மறைந்துவிடும்.
“தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் மறைந்துவிடும்”
என்ற பாடல் இந்த உண்மையை உணரச் செய்யும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தாய்மையின் சிறப்புக்களைப் பற்றி தொடர்ந்து எழுதிக்கொண்டே போகலாம்.
“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானினும் நனி சிறந்ததுவே”
என்ற இரண்டு வரிகளிலே சொல்லப்பட்டிருக்கின்ற அல்லது அந்த வரிகளுக்குள்ளே இருக்கின்ற உண்மையை உணர்ந்து கொள்வோமாக!

# சனசமூக நிலையக் கட்டடத்தில் ஆடுமாடுகள் உறங்குகின்றனவா?

ஆசிரியர் குழு
அகல்விளக்கு
கைதடி அபிவிருத்திக் கழகம்
பிரான்ஸ்

வணக்கம்!

தங்களின் மூன்றாவது இதழான ஆடி, ஆவணி, புரட்டாதி 2008 அகல்விளக்கு காலண்டு பத்திரிகையை பார்வையிட்டோம் மகிழ்ச்சி, புலம்பெயர் வாழ்வியலில் எம்மவர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை சீராக அமைத்துக்கொள்ளும் நோக்கில் இரவு பகலாக உழைப்பை மையப்படுத்தி கடுகதி ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் காலமிது. வீட்டில் ஆற அமர இருப்பதற்கோ நீட்டி நிமிர்ந்து நின்மதியாக உறங்குவதற்கோ நேரமில்லை சீரற்ற சூழல், இந்த சூழ்நிலைக்குள்ளும் எம் கிராமத்தவர்களின் ஆற்றலை வெளிக் கொணர்வதுடன் புலம்பெயர், தாயக உறவுகளின் ஒற்றுமை யையும் மேம்பாட்டினையும் வளர்த்தெடுக்கும் நோக்கில் கைதடி அபிவிருத்திக் கழகம் பிரான்ஸ், அகல்விளக்கை ஒளிரச்செய்து கொண்டிருப்பது இமாலய சாதனையாகும். பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

கடந்த 25.12.2008 அன்று கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய வருடாந்த ஒன்றுகூடல் சுவிஸில் நடைபெற்றபோது அகல்விளக்கு தொடர்பான ஆரோக்கியமான பல விடயங்களோடு சில உண்மைக்கு புறம்பான சம்பவங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளதாக எமது அங்கத்தவர்களால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. முதலில்கைதடி தெற்கு சனசமூக நிலை 53வது அகவை நாள் தொடர்பான கட்டுரையில் நிலையத்தின் தோற்றம், அதன் பொதுப்பணி, ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி தோற்றம், நிர்வாகத்திறமை, அங்கத்தவர்களின் கட்டுப்பாடு போன்றவற்றினை பாராட்டிய அதேவேளை கட்டுரையின் ஒரு பந்தியில் சில இடங்களில் பெயரளவிற்கு சனசமூக நிலையங்கள் இருக்கும் அங்கே ஆடு மாடுகள் தான் படுத்துறங்கும் ஆனால் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் மட்டும் அப்படியல்ல என்ற கருத்து எமது சனசமூக நிலைய உறுப்பினர்களின் மனதை புண்படுத்துவதோடு மட்டுமல்ல ஏனைய சனசமூக நிலையங்களில் ஆடுமாடுகள் தான் உறங்குகின்றன என்ற எண்ணப்பாட்டினையும் தோற்றிவித்துள்ளது. எமது சனசமூக நிலையம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை பல செயற்பாடுகளில் தொடர்ச்சியாக இயங்குக் கொண்டிருக்கின்றது. எனவே இச்சொற்பிரயோகம் எமது அங்கத்த வர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்து சாந்தியில்லை என்ற சம்பவத்தில் வீதியில் நடமாடியவர்கள் வீட்டிலுள்ளவர்களை குரலெடுத்து அழைத்தபோது துணிவை வரவழைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே தனியாக வந்தார் என்ற பகுது உண்மைக்கு புறம்பானது, அச்சமயம் தாய், சகோதரிகள் சேர்ந்துதான் வெளியே வந்தார்கள் என்பதுதான் உண்மை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. உண்மைச் சம்பவம் திரிபுபடுத்தப்பட்டிருப்பது அவரின் குடும்பத்தாரின் மனதை புண்படுத்துயுள்ளது. இப்படியான உண்மைச் சம்பவங் களைபிரசுருக்கும்போது அவைதொடர்பான நபர்களை அணுகி ஆலோசித்து அனுமதி பெற்று வெளியிடுவது ரோக்கி யமானதென கருதுகின்றோம்.

எனவே எமது நிலையத்தால் முன் வைக்கப்பட்ட இவ்விரண்டு விளக்கத்தினையும் பதிலையும் தருவீர்கள் என நம்புகின்றோம்.

நன்றி!
**கைதடிமேற்கு**
**சரஸ்வதி சனசமூக**
**நிலையம் - சுவிஸ்கிளை**

# சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்குகின்றன

**- ஆசிரியர் விளக்கம்**

**சரஸ்வதி சனசமூக நிலைய சுவிஸ்கிளையினருக்கு!**

இனிய உறவுகவுகளே தங்களின் விமர்சனக்கடிதம் கிடைக்கப்பெற்றோம் மிக்க மகிழ்ச்சி. கிராமத்தின் வளர்ச்சியில் அக்கறையுடனும் சமுதாய முன்னேற்றத்தில் ஆர்வத்துடனும் செயற்படும் தங்களின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள் கிறோம். கடந்த பதினைந்து வருடத்திற்கு மேலாக கைதடி மேற்கு கிராமத்திற்காக தாங்கள் ஆற்றிவரும் பணிகளும், செய்துவருகின்ற சேவைகளும் பாராட்டப்பட வேண்டும். சொந்த மண்ணைவிட்டு புலம்பெயர்ந்தபோதும் வந்த மண்ணிலிருந்து கொண்டும் சனசமூக நிலையத்திற்காக அயராது, ஓயாது, சலியாது பாடுபடுகின்ற உங்கள் அனைவரினதும் கிராமம் மீதான பற்றுதலையும், விசுவாசத்தையும் வார்த்தைகளில் வடித்துவிட முடியாது. ஐரோப்பிய மண்ணில் (எம்மவர்கள்) முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட சனசமூ நிலையம் என்ற மகுடத்துடன் ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்புடன் செயற்படும் [redacted] (கைதடி) சரஸ்வதி சனசமூக நிலைய சுவிஸ்கிளை மேலும் மேலும் வளர்ந்து தான் சார்ந்த மக்களுக்கு பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

அகல்விளக்கு ஒரு தனிமனிதனுக்கோ அல்லது ஒரு குழுவிற்கோ சொந்தமானதல்ல கைதடி மக்கள் அனைவருக்கும் உரித்தான ஒரு இதழ். எனவே இதில் எழுதுகின்றவர்களும், இதற்கான ஆக்கமும், ஊக்கமும் அளிப்பவர்களும் நீங்கள்தான். இவ் இதழிலே தவறுகள் இடம்பெறுமானால் அவற்றை சுட்டிக்காட்டி சரியான பாதையினை காட்டவேண்டியது உங்கள் அனைவரினதும் கடமையும், பொறுப்புமாகும் இதனை நீங்கள் தட்டிக்கழிக்க மாட்டீர்கள் என்று நம்புகின்றோம். அகல்விளக்குகுழந்தைக்கு ஒரு வயது பூர்த்தியாகிவிட்டது தவழ்ந்து, மெல்ல எழுந்து தற்பொழுது நடந்துகொண்டிருக்கின்றது. இந்தக் குழந்தையை அரவணைக்கவும், தூக்கி முத்தமிட்டு தாலாட்டவும் இருக்கின்ற உரிமை, அதன் தவறுகளை திருத்தவும், அறிவுரை கூறவும் தங்களுக்கு இருக்கின்றது. அந்தவகையில் தங்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு ஆடி-புரட்டாதி 2008 இதழில் வெளியான இரு விடயங்கள் தொடர்பாக தங்களினால் கேட்கப்பட்ட விளக்கத்திற்கு எமது பதிலை இங்கே தருகின்றோம்.

1. கைதடி தெற்கு சனசமூக நிலையம் சம்பந்தமான கட்டுரையில் சில இடங்களில் பெயரளவிற்குத்தான் சனசமூக நிலையங்கள் இருக்கும் அங்கே ஆடு மாடுகள் தான் படுத்துறங்கும் ஆனால் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் <u>மட்டும்</u> அப்படியல்ல என்று பிரசுரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.

அகல்விளக்கு பத்திரிகையில் சில இடங்களில் பெயரளவிற்குத்தான் சனசமூக நிலையங்கள் இருக்கும் அங்கே ஆடு மாடுகள் தான் படுத்துறங்கும் ஆனால் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் அப்படியல்ல இவ்வாறுதான் கட்டுரையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. <u>மட்டும்</u> என்ற வார்த்தை அந்தக் கட்டுரையில் பிரசுரிக்கப்படவில்லை என்பதனை தங்கள்மேலான கவனத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இந்த வாசகமானது ஒரு நிலையத்தினை சுட்டிக் காட்டியோ அல்லது ஏனைய சனசமூக நிலையங்களை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் எழுதப்படவில்லை.

(12ம் பக்கம் பார்க்க)

## தகவல் தொழிநுட்பத்தின்......

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தொங்கியதுடன் 1000 இணைப்புக்களை எட்டிப்பிடித்தது.

- 1985- AOL, .com, .edu, .gov உதயம்.
- 1986- .net அறிமுகம்.
- 1987- .org இணைய சுட்டி இணைப்பி அறிவிப்புடன் 28,000 இணைப்புகளுடன் பயணம் தொடர்ந்த ஆண்டு.
- 1988- இணைய சந்திப்பு (chat) உருப்பெற்றதோடு கணனிகளில் இணைய வழி வைரஸ் தாக்கமுடன் 60,000 இணைப்புக்களை தாண்டியது.
- 1989- இணைப்புக்களை 100,000 மேல் சென்ற நிலையில் world.std.com உதயம். Tim Berners-lee தனது இணைய ஆராய்ச்சியின் விளைவாக கணனிகள் பேசும் இணைய மொழியை (HTML) வெளியிட்டதுமல்லாமல் WWW ஐயும் நிறுவினார்.
- 1990- இல் world.std.com தனது (dial-up) சேவை மூலமாக உலகின் முதல் வர்த்தக நோக்கிலான இணைய இணைப்பு தொடங்கியதோடு 300 ஆயிரம் இணைப்புகள் உலகளவில் இருப்பது கணக்கிடப்பட்டது.
- 1991- சர்வதேச வலைப்பின்னல் குறியீடு " w w w" நடைமுறைக்கு வந்த ஆண்டாகியது.
- 1992- இணைய சமூக அமைப்பு (ISOC) உருவாக்கத்துடன் ஒரு மில்லியன் பாவனையாளர்களை உலகளவில் இணைய சேவை பெற்றது பதிவானது.
- 1993- இணைய வானொலி, இணையத்தள பேசுமொழி பரிமாற்றி அமுலாக்கி (http) அறிமுகத்தோடு mosaic உதயம்.
- 1994- இணையம் பிறந்து 25 வருடம் பூர்த்தி, அத்துடன் இணைய உலகின் பிரபல்யமான yahoo, amazon, w3c, netscape அவதரிப்போடு 6 மில்லியன் பாவனையாளர்கள் உலகளவில் இணைய சேவை பெற்றது பதிவானது.
- 1995- புகழ்பெற்ற கணனி இணைய இயக்கிகள் Internet Explorar, Mozilla வருகை. இணையவர்த்தகத்தில் அழியா புகழ் பெற்ற e-bay (இன்று வரை 223 மில்லியன் மேலான பதிவு செய்யப்பட்ட பாவனையாளர்கள்.) வெளியானதோடு java - javascript அறிமுகமானது. இவற்றோடு Alta Vista, mp3 என பல புரட்சி வருகை கண்ட வருடம்.
- 1996- இணைய தொலைபேசி, இணைய தொலைக்காட்சி, இணைய உலகில் தகவல் பெற என்றும் தட்டப்படும் wiki, Alexa என்பவற்றின் வருகை. tv.com $15000 ற்கு விற்கப்பட்டது இணைய உலகில் 1.7 மில்லியன் பாவனையாளர்களை உலகளவில் இணைய சேவை பெற்றது பதிவானது.
- 1997- தொடுப்பில்லா தொடர்பு (WAP) அறிமுகம். Business.com $150000 ற்கு விலைபோனது. இந்த ஆண்டு 19.5 மில்லியன் இணைப்புக்களை எட்டிப்பிடித்தது. Netscape மிகவும் குறைந்த விலையில் dmoz.org ஐ கொள்முதல் செய்தனர்.
- 1998- மேலும் பல சாதனை கண்ட வருடமாக Google வருகையுடன் Netscape ஐ AOL மிகமிகப்பெரிய விலைக்கும் Compaq நிறுவனம் AltaVista ஐயும் கொள்முதல் செய்தன.
- 1999- இந்த ஆண்டில் my space, paypal இவற்றின் வருகையுடன் "blog" என்ற சொற்பிரயோகம் நடைமுறைக்கு வந்தது. Alexa ஐ தனக்கு சொந்தமாக்க Amazone $250 மில்லியன்களை கொடுத்தது.
- 2000- சட்டவிரோத இணைய உடைப்பு கும்பல்களின் ஆதிக்கத்திற்குள் உலக இணையத்தளம் சிக்கிய வருடமாகியது (hack of the year). AOL $16 பில்லியன்களை கொடுத்து Time warner ஐ சொந்தமாக்கியது.
- 2001- மின் அஞ்சல்கள் வைரஸ் தாக்கத்திற்குட்பட்ட பிரபல்யமான ஆண்டானதுடன்(virus of the year) .biz, .info அறிமுகமானது. இது மட்டுமல்லாமல் கட்டற்ற கலைக்களஞ்சியமான wikipedia பிறந்ததும் இந்த ஆண்டில் தான்.
- 2002- உலகளாவிய இணைய பாவனையாளர் எண்ணிக்கை 544.2 மில்லியங்களை தாண்டியது. RSS, podcast, blog வருகையுடன் .name, .coop அறிமுகமானது.
- 2003- மேலும் இணையதள பெயர்களின் இணைப்பு சுட்டியான .pro உடன் iTune அறிமுகமானது. இந்த ஆண்டிலேயே பிரபல்யமான உரிமை மீறல் aol-microsoft தீர்ப்பானது. AOL இற்கு $750 மில்லியன் நஸ்டஈடாக கொடுத்ததுடன் netscape இன் வீழ்ச்சிக்கான சூழ்ச்சி செய்த வருடம் இதுதான்.
- 2004- கணனி இணைய இயக்கி FireFox பிறந்ததுடன் இணைய தளமூடான வர்த்தக வருவாய் 117 பில்லியங்களையும் தாண்டியது.
- 2005- இணைய உலகின் பெயர்பெற்ற video தளம் YouTube உருவானது.
- 2006- Google தனது இணைய ஆக்கிரமிப்பு போட்டியில் $1.65 பில்லியன்களை கொடுத்து YouTube ஐ சொந்தமாக்கியது. இணைய உலகத்தில் 92 மில்லியனுக்கு மேலான இணையதளங்கள் வலம் வந்தன.
- 2007- 30.09.2007 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் படி உலக இணையத்தள பாவனையாளர்களின் எண்ணிக்கை 1,244,449,601 ஐயும் தாண்டி சாதனை தொடர்கிறது.

**செல்வி சுகன்யா சந்திரபாலன்**

---

**சனசமூக நிலையம்...........**

(11ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுடைய கிராமத்தைப்
பொறுத்தவரை எமது சனசமூக
நிலையங்கள் அனைத்துமே அன்று
தொடக்கம் இன்றுவரையும் சிறப்பாகவே
இயங்குகின்றன. எமது நிலையச் செயற்
பாற்பாடுகள் தொடர்பாக
அனைவருக்குமே நன்கு தெரி
யும். ஆண்டுவிழாக்கள், வாணிவிழா
உட்பட்ட விழாக்களும்கல்வி,
கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்கான
திட்டங்களும் எமது நிலையங்களால்
ஆண்டுதோறும் மேற்கொள்
ளப்பட்டு வருகின்றன. எந்த ஒரு
காலகட்டத்திலும் எமது
நிலையங்களில் ஆடு மாடுகள்
உறங்கியது கிடையாது.
[illegible]

[illegible] .தயவு செய்து இதை
எங்கள் நிலையங்க
ளோடு சம்பந்தப்படுத்தி எவரும் பார்க்க
வேண்டாம் என்று
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக கைதடி மேற்கு சரஸ்வதி
சனசமூக நிலைய
ஒன்றுகூடலில் இவ்விவகாரம் தொடர்பாக
நீண்டமணி
நேரம் விவாதிக்கப்பட்டதாக
அறிகின்றோம். இவ்விடயம்
தொடர்பாக அகல்விளக்கு முகவரிக்கு
தொலைபேசி அல்
லது மின்னஞ்சல் மூலம்
தெரிவித்திருந்தால் உங்களுடைய
நேரத்தை மீதப்படுத்தியிருக்க முடியும்
எவருமே தொடர்பு
கொள்ளாதது கவலையளிக்கிறது.
தங்கள் அனைவரினதும் நிலைய
விசுவாசத்திற்கும், அர்ப்பணிப்பான
செயற்பாடுகளுக்கும் நாங்கள்
தலைவணங்கு
கின்றோம் குறிப்பிட்ட வாசகங்களினால்
தங்களுக்கு உண்டான மன
உளைச்சலுக்கு வருந்துவதுடன்
எதிர்வரும்
காலங்களில் இவ்வாறான வாசகங்களை
தவிர்ப்பதுடன் தங்கள் ஆலோசனைக்கு
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்
கின்றோம்.

2. சாந்தியில்லை விவகாரம் தொடர்பாக
தாங்கள் கேட்ட விளக்கத்திற்கு ஐப்பசி -
மார்கழி 2008' இதழில்
விளக்கமளித்துள்ளோம் அதனையே
இதற்கான பதிலாக ஏற்றுக்
கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி!

ஆ-ர்
அகல்விளக்கு

# என் அம்மாவின் நினைவுகளில்...................

வெள்ளையாய் - உயரமாய் - நீளமுகத்துடன் யாரைப் பார்த்தாலும் அம்மாவின் ஞாபகம் வந்துவிடும் எனக்கு. அதிலும் அம்மாவைப் பிரிந்து புலம்பெயர்ந்து வாழ்கின்ற இந்த ஐந்து வருடங்களில் அம்மாவின் நினைவுகள் எனக்குள் மிகமிக அதிகம். முப்பது வயதுவரை அம்மாவின் அன்புக்கும் அரவணைப்புக்குமிடையே குழந்தையாகவே வாழ்ந்த நான், திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான பின்பு வாழ்க்கையை மட்டுமல்ல என் அம்மாவையும்கூட அதிகமாய் புரிந்திருக்கின்றேன் என்பதுதான் உண்மை.

என் அம்மா ஒரு சாதாரண பெண்ணாகத்தான் வாழ்ந்திருக்கின்றாள் என்றால் என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. சிறுவயதிலிருந்து துன்பங்களோடும் பிரச்சினைகளோடும் வாழத்தொடங்கிய என் அம்மா, இளம்வயதில் புரட்சிகரமான சிந்தனைகள் கொண்ட ஒரு முற்போக்குவாதியாய் செயற்பட்டதையும் திருமணமாகி கணவன் பிள்ளைகள் என பொறுப்புக்கள் நிறைந்த சூழ்நிலையில் குடும்பத்திற்காக உழைப்பவளாகவும்தான் நான் அவளை உணர்ந்திருக்கின்றேன். கொடுமைகளைக் கண்டு கோபப்படுகின்ற அம்மா, தகாதது என்றால் தைரியமாக பேசிக்கொள்கின்ற அம்மா என்னைப் பொறுத்தவரை ஒரு சராசரிப் பெண் இல்லை என்பதும் அதற்கும் மேலே ஒரு சாதனைப் பெண் என்பதும் என் கருத்து.

என் அம்மா ஒரு சராசரிப் பெண்ணோ என்னவோ ஆனால் அவள் ஒரு சாதாரண தாயாகத்தான் வாழ்ந்தாள் என்பதை நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அம்மா பற்றிய என் நினைவுகளில் மிகப்பழைமையானது என் பாடசாலை முதல்நாள்தான். அப்போது எனக்கு ஆறு வயது. வெள்ளைச்சீருடை அணிந்து என் அம்மாவின் சேலைத் தலைப்பை பற்றியபடி அவள் பின்னால் நடந்துகொண்டிருக்கின்றேன். முதன்முதல் பாடசாலைக்கு செல்கின்ற மகிழ்ச்சி என்னிடமிருக்கவில்லை. பயமும் வெறுப்புமாக பாடசாலைக்குள் நுழைந்த என்னை அம்மா, ஆறுதல்படுத்தி படிக்கச்செய்தது இப்போதும் ஞாபகத்திலிருக்கிறது. அன்றிலிருந்து அம்மா என் படிப்பு விடயத்தில் மிகமிக கண்டிப்பாக இருந்தாள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அம்மா மட்டுமல்ல அப்பாவும் கூட படி படி என்பதும் படிப்பைப்பற்றியே பேசுவதும் அப்போதெல்லாம் வெறுப்பாக இருந்தாலும் இதோ ...இப்போது நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமாகவும் பெருமையாகவும் இருக்கிறது. க.பொ.த. உயர்தரம் படிக்கும்போது என்னை படிக்கும்படி சொல்லவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. நானாகவே உணர்ந்து படிக்கத் தொடங்கியமை இந்த வழிகாட்டலின் தொடர்ச்சி என்றே கூறவேண்டும். பல்கலைக்கழகத்தில் எனக்குக் கிடைத்த பட்டம் எனக்குரியதல்ல. படி படி என்று நித்தமும் என்னைச் செதுக்கிய அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கிடைத்த பட்டம் என்பதுதான் உண்மை.

நான், அம்மா, அப்பா, மூன்று சகோதரர்கள் என ஆறுபேரைக் கொண்ட அழகான குடும்பம் என்னுடையது. அன்பான - அமைதியான அப்பா, பாசமும் பக்குவமும் நிறைந்த அம்மா, அருமைச் சகோதரர்கள் என அத்தனைபேரும் ஒன்றாய் வாழ்ந்த வாழ்வை இப்போது நினைத்துப்பார்த்தாலும் இனிக்கிறது. 'குடும்பம் ஒரு கோயில்' என்பதும் 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பதும் உண்மைதான் என்பதை அனுபவம் மூலமாக நான் உணர்ந்திருக்கின்றேன். அளவுக்கு மிஞ்சிய அன்பு, அளவான கண்டிப்பு, எதையும் வெளிப்படையாக பேசிக்கொள்ளும் பண்பு இவைதான் என் குடும்பத்தின் வெற்றிக்குக் காரணம் என்றாலும் அவையெல்லாவற்றுக்கும் அம்மா தான் முதற்காரணம் என்பது முற்றிலும் உண்மை.

நான் அப்போது விடுதியில் தங்கிப் படித்துக்கொண்டிருந்த காலம். படிப்பைத் தவிர வேறு எதைப்பற்றியும் அலட்டிக் கொள்ளமுடியாத சூழ்நிலை. அப்போதெல்லாம் எமக்கிருந்த முக்கிய பிரச்சினை சாப்பாடுதான். சுவையோ ஆரோக்கியமோ இல்லாத கடைச்சாப்பாட்டிலேயே எம்காலம் ஓடிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் காலை, மதியம், இரவு என மூன்று நேர உணவையும் தன்கையால் சமைத்து சைக்கிளோடி கொண்டுவந்து தருகின்ற அம்மாவின் பாசத்தை இன்று நானும் தாயான பிறகுதான் புரிந்து கொள்ளமுடிகின்றது. பிள்ளைகளின் பசி பொறுக்காத தன்மை - தன் பிள்ளைகள்போலவே மற்றவர்களினதும் பசியை ஆற்றும் தன்மை - பசித்த வயிறுக்கு பரிமாறுவதிலேயே தன் பசியை ஆற்றும் தன்மை ஒரு தாயைத் தவிர வேறு யாராலும் உணர முடியாது.

பிரச்சினைகள் - சிக்கல்கள் இல்லாமற் குடும்பங்கள் இல்லை. வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது யதார்த்தமாயினும் என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எந்த விடயத்திலும் கருத்து வேறுபாடு இருந்ததை நான் கண்டதில்லை. பிள்ளைகளாகிய எம்மை கண்டிக்கும் போதுகூட இருவரும் ஒன்றாகச் சேர்ந்தே கண்டிப்பார்கள். அம்மாவோ அப்பாவோ எமக்கு ஆதரவு தரவில்லை என அப்போது ஆதங்கப்பட்டாலும்கூட "எங்களைப் பேசுறதெண்டாலும் அம்மாவும் அப்பாவும் ஒண்டாக சேர்ந்துதான் பேசுவினம்" என மற்றவர்களுக்கு கூறுவதில் பெருமிதம்தான் எமக்கு. அப்படியானால் என் அம்மாவுக்கும் அப்பாவுக்குமிடையே கருத்து வேறுபாடுகளே இருந்ததில்லையா? இல்லை என என்னால் கூறமுடியாது. எத்தனையோ பிரச்சினைகள். பிள்ளைகளாகிய எமக்குத் தெரியாமலே அவையனைத்தையும் தமக்குள்ளேயே தீர்த்துக கொள்கின்ற அந்த பக்குவம் யார் சொல்லிக் கொடுத்தது? எந்தப் பாடசாலைப் பாடமது? எனக்குத் தெரியவில்லை.

புலம்பெயர் நாடொன்றில் இயந்திரத்தனமான வாழ்வுக்கிடையே சிக்கித் தடுமாறும் எனக்கு வாழ்க்கை பற்றிய பயம் மிகமிக அதிகம் என்றே கூறவேண்டும். பேசுவதற்குக்கூட அவகாசமில்லாத இந்த அவசர வாழ்வியலில் - தொலைக்காட்சிகளோடும் கணனிகளோடும் மூழ்கிப்போன மனித வாழ்வியலில் கருத்துப்பரிமாற்றங்களுக்கும் புரிந்து கொள்ளலுக்கும் அவகாசம் ஏது? பிரச்சினைகள் என்னைச் சூழ்கின்றபோதும் அதிலிருந்து மீளும் வழியின்றி திகைக்கும்போதும் என் அம்மாவின் நிர்வாகத்திறனை – அவள் ஆளுமையின் வெளிப்பாட்டை நினைத்து வியந்து போகின்றேன். பிள்ளையின் சின்னச்சின்ன நடவடிக்கைகளைப் பார்த்துப் பொறுமை இழக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் இப்படித்தானே என் அம்மாவும் துன்பப்பட்டிருப்பாள் - சிரமப்பட்டிருப்பாள் என ஆதங்கம் கொள்கின்றேன். ஆம...... அம்மாவோடு வாழ்ந்த காலத்தைவிட அவளைப் பிரிந்து வாழும் இந்தக் காலங்கள் அம்மாவை எனக்குள் எப்போதுமே ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கின்றன என்பது உண்மை.

இதோ.... தலை நரைத்து, தோல் சுருங்கி, உடல் தளர்ந்து, முதுமையின் பிடியில் என் அம்மா. அப்பாவை இழந்து, பிள்ளைகளைப் பிரிந்து தனித்துப் போனவளாய் என் தாய்....

இப்போதெல்லாம் அம்மாவிடம் போக வேண்டும் என்ற ஒரேயொரு ஆசைதான் எனக்கு. அம்மாவின் மடியில் தலைசாய்த்துப் படுக்கவேண்டும் என்றும் அவளுக்கு வயிறார உணவு சமைத்துப் பரிமாற வேண்டும் என்றும் என்பிள்ளை அவளோடு விளையாடும் அழகைப் பார்க்கவேண்டும் என்றும் கடைசிவரை அவளைப் பராமரிக்கவேண்டுமென்றும் எனக்குள் ஆயிரம் ஆயிரம் ஆசைகள். ஆம்..... இப்போதெல்லாம் ஒரு குழந்தையைப் போலவே என் அம்மாவை நினைத்துக கொள்கின்றேன். அம்மாவே குழந்தையா? அம்மாவையே குழந்தையாக கருதும் இந்த அதிசய உணர்வுக்குப் பெயர்தான் தாய்மையா? எனக்குப் புரியவில்லை.

**- சின்னக்கிளி -**

# நெஞ்சில் நிறைந்தவர்

## அமரர் கணபதி விநாசித்தம்பி (ஜப்பான்)

தோன்றில் புகழுடன் தோன்றுக அஃதிலார்
தோன்றில் தோன்றாமை நன்று. என்ற வள்ளுவர்
வாக்கிற்கு அமைய தான் பிறந்த கிராமத்திற்கும் மக்களுக்கும்
பயன்படக்கூடியவகையில் சேவைகள்
செய்தவர். கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக
நிலைய ஸ்தாபகரான திரு. யப்பான் கைதடி மேற்கு மக்களின்
நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கின்றார்.

தனது 20வது வயதில் சி.கதிரன் (வீ.சி) என்பவரின் புகைக்குடிலில் சனசமூக நிலையத்தை உருவாக்கினார். அவருக்கு உதவியாக பொன் . செல்லையா, நா. கந்தையா (அதிபர்) கெமிக்கல் கந்தையா, க.சின்னத்தம்பி (சின்னராசா) போன்றோர் செயற்பட்டார்கள். விளையாட்டுத்துறையிலும் புகழ்பெற்றார் யப்பான். யப்பான் விளையாட்டுக்கழகம் என்பது பின்னர் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் என்ற பெயரில் பிரபல்யமானது. தென்மராட்சி ரீதியிலும் யாழ் மாவட்ட ரீதிலும் நடைபெற்ற கரபந்தாட்ட போட்டிளில் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் வெற்றி வாகை சூடிசம்பியன் கேடயங்களையும் வெள்ளிப் பதக்கங்களையும்பெற்றதற்கு ஆரம்ப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட யப்பான் விளையாட்டுக்கழகம் தான் அத்திவாரமாக அமைந்தது.

நான்கு பெண் சகோதரிகளுக்கு பெறுப்பாக இருந்தவேளையிலும் அவருடைய சிந்தனைகள், நோக்கங்கள் எல்லாம் கிராம மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்திலேயே இருந்தது. யப்பான் அவர்களால் புகைக்குடிலில் ஆரம்பித்து வைக்கப்பட்டசரஸ்வதி சனசமூக நிலையம் இன்று படிப்படியாகமுன்னேறி சரஸ்வதி கலை அரங்கு என்ற பிரமாண்டமான கட்டிடமாக நிமிர்ந்து நிற்கிறது. யாழ் மாவட்ட ரீதியில் உள்ள சனசமூக நிரலைய கலையரங்குகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அழகாவும் பெரிதாகவும் இருக்கின்றது. யப்பான் அன்று போட்ட வித்து இன்று அலமரமாக வியாபத்து நிற்பது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கின்றது.

திரு. யப்பான் குடும்பத்தின் பரம்பரைக் கோயிலும் சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு அருகில் அமைந்திருக்கும் ஞான வைரவர் ஆலயம் பரிபாலன சபை உருவாக்கப்பட்டு கைதடி தெற்கு ஞான வைரவர் ஆலயம் போல் பெரிதாகக் கட்டப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட வேண்டும் என்ற அவருடைய கனவு 2009 நடுப் பகுதியில் நிறைவேறப்போவதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

கைதடி மேற்கு மக்கள் யப்பான் அவர்களை தங்கள் நெஞ்சில் வைத்திருக்கின்றார்கள் என்பதற்கு உதாரணமாக 1993 நவராத்திரி ஆரம்ப நாளன்று சரஸ்வதி சனசமூக நிலைய கலை அரங்கு திறப்பு விழாவின்போது அரசாங்க அதிபர், உதவி அரசாங்கஅதிபர் எவரையும் அழைத்து திறக்காமல் யப்பான் அவர்களின் கூடப்பிறந்த சகோதரர் திரு. கணபதிஜயங்கனுக்கு மதிப்புக் கொடுத்து திறக்கச் செய்தது பாராட்டக்கூடியதாக இருந்தது.

- லிங்கம்

# எமது அஞ்சலிகள்

தாயகத்தில் அண்மையில் காலமான எமது
உறவுகளுக்கு எங்கள் அஞ்சலிகளை
தெரிவிப்பதுடன் இந்த இழப்புக்களினால்
துன்பக்கடலில் முழ்கியுள்ள அமரர்களின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.




- அமரர் திருமதி கணேஷ் பூரணம் (கைதடி மேற்கு)
- அமரர் எஸ்.வல்லி (கைதடி மத்தி)
- அமரர் வெள்ளையன் கதிர்காமு (கைதடி மேற்கு)
- அமரர் திருமதி பரமேஸ்வரன் யோகராணி (ராணி) (கைதடி வடக்கு)
- அமரர் திருமதி எஸ். சுகந்தினி (கைதடி வடக்கு)
- அமரர் செல்வி விநாயகமூர்த்தி அகிம்சா (5வயது) (கைதடி வடக்கு)
- அமரர் சிவராசா சுதாகர் (நவபுரம்)
- அமரர் சிவராசா ரவிக்குமார் (நவபுரம்)
- அமரர் நாகராஜா மதன் (கைதடி வடக்கு)

• அமர் திருமதி சிவலிங்கம் அருளம்மா (நவபுரம், கைதடி)

வன்னியில் இடம் பெற்ற
தாக்குதல்களிலும் மேலும் எமது
உறவுகள் பலர் கொல்லப்பட்டதாக
கூறப்படுகின்ற போதிலும் உறுதியான
தகவல்கள் கிடைக்கவில்லை. அந்த
தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்
அடுத்த இதழில் அவர்களது விபரங்கள்
பிரசுரமாகும்.

# கார் ஓட்டப்பந்தயத்தில் சாதனை புரியும் பரமேஸ்



எங்களுடைய கிராமத்தில் கலை இலக்கிய மற்றும் விளையாட்டு உட்பட பல துறைகளிலும் ஈடுபட்டு அதனூடாக கிராமத்துக்கு பெருமை தேடித் தந்தவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களின் விபரங்களை முடிந்தவரை நாம் வெளியிட்டு வருகின்றோம். அந்த வரிசையில் இந்த மாதத்துக்கான சாதனையாளராக திரு.க.பரமேஸ்வரன் "அகல் விளக்கு" குழுவினரால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

திரு.க.பரமேஸ்வரன் என்றால் கொழும்பிலுள்ள வெளிநாட்டு முகவர் 'களில் ஒருவர் என்று அடையாளம் காணப்பட்ட பரமேஸ் அவர்கள் தனது விடா முயற்சியினாலும் இயல்பாகவே அவரிடமிருந்த திறமையினாலும் இன்று இலங்கையின் கார்ப்பந்தயப் போட்டியில் ஒரு முதன்மையான வீரராக திகழ் கின்றார். பொதுவாகவே கார் ஓட்டப் போட்டிகளில் எம்மவர்கள் பங்கு பற்றுவது மிக அரிதாக இருக்கின்றது. அவ்வாறு பங்கு பற்றினாலும் வெற்றி பெறுவது முயற்கொம்பாகவே இருந்தது. ஆனால் பரமேஸ்வரனைப் பொறுத்த வரை அவர் கலந்து கொண்ட போட்டிகள் அனைத்திலுமே வெற்றி நாயகனாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்.

தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்கள் மத்தியிலும் பரமேஸ் அவர்களுக்கு பெரும் வரவேற்பு இருப்பதனை அவரது கார் ஓட்டப் போட்டிகளை பார்வையிட்டபோது அறிந்து கொள்ள முடிகிறது. கார் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொள்வது என்பது பெரும் சிரமமான விடயமாக இருப்பதுடன் பெரும் பணச்செலவினையும் ஏற்படுத்தும் ஒரு விவகாரம் ஆகும்.

ஒரு போட்டியில் பங்குபற்றுவதாக இருந்தால் அதற்கு தயார்ப்படுத்தல் பயிற்சி எடுத்தல் என போட்டிநாள் வரும் வரையும் பெரும் செலவு செய்ய வேண்டியிருக்கும். மேலும் அதற்கான சக்தி வாய்ந்த கார் ஒன்றும் தேவைப்படும். இந்தச் செலவுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக கொண்டு திரு.க.பரமேஸ்வரன் சாதனை படைத்து வருகின்றார். இவரின் உழைப்பின் பெரும் பகுதி கார் ஓட்டப் போட்டிக்காக செலவு செய்யப்படுவதை அவருடன் பழகிய வர்களுக்கு நன்கு தெரியும். கார் ஓட்டப் போட்டிக்குரிய சீருடையுடன் அதற்கென தயாரிக்கப்பட்ட தலைக் கவசம் அணிந்து பரமேஸ் காரில் அமர்ந்து ஸ்ரார்ட் எடுக்கும் அழகே தனி அழகு .ஏனைய போட்டியாளர்களுடன் அவர்களை முந்திச் செல்ல விடாது வளைவுகளிலும் குறுக்குப் பாதைகளிலும் அவர் விறுவிறுப்பாகவும் உற்சாகமாகவும் காரை லாவகமாக செலுத்துவார். ஒவ்வொரு வளைவுகளிலும் கார் செல்கின்றபோது கவிழ்ந்து விழுவது போல்த் தோன்றும். ஆனால் அதற்குள் அவர் சுதாகரித்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு ஓட்டிச் செல்வதில் பரமேசுக்கு நிகர் எவருமில்லை.

கார் ஓட்டப் பந்தயத்தில் பங்கு பற்றுவது என்பது சுலபமான விடயமல்ல. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் உயிரைப் பணயம் வைத்துத் தான் போட்டியாளர்கள் பங்கு பற்றுகின்றார்கள். போட்டி என்று வந்துவிட்டால் உயிரை துச்சமாக மதித்து இறுதி இலக்கை அடையும் வரை பரமேஸ் துணிச்சலுடன் களத்தில் இறங்கி விளையாடுவார்.

நாவற்குழிப் பிரதேசத்தில் வறிய குடும்பமொன்றில் பிறந்த பரமேஸ் தனது தந்தையாரை சிறு வயதிலேயே இழந்தவர். இதனால் அந்த வயதிலே பல சகோதரிகள் சகோதரர்கள் அடங்கிய முழுக்குடும்பத்தினரையும் பராமரிக்க வேண்டிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.அதனால் அந்த வயதில் பெறவேண்டிய பாடசாலைக் கல்வியை தொடரமுடியாத நிலையில் கொழும்பு நகருக்கு வந்து தமது உறவினர் ஒருவரின் மெக்கானிக் நிலையத்தில் வேலைக்கு சேர்ந்து கொண்டார். மிகச் சிறு வயதில் கல்வியை தொடரமுடியாத நிலை ஏற்பட்டாலும் ஏதோ ஒரு துறையில் தான் முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் அவர் அடிமனதில் குடிகொண்டிருந்தது.

கொழும்பில் வேலை செய்த காலத்தில் சிங்கள மொழியை சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டதுடன் வாகனங்கள் திருத்துவது தொடர்பான சகல தொழிநுட்பங்களையும் மிக நுணுக்கமாகக் கற்றுக்கொண்டு மீண்டும் நாவற்குழிக்கு திரும்பிய அவர் கைதடிச் சந்தியிலுள்ள தனியார் மெக்கானிக் நிலையத்தில் தொழில் செய்து தனது வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருந்தார். இந்தக் காலத்தில் தான் யாழ்.மாவட்டத்தில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் கிராமங்கள் தோறும் நடைபெற்று வந்தன. தமது நண்பர்கள் மற்றும் அயலவர்கள் என பலரும் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்வதை பார்வையாளனாக இருந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த அவர் தானும் அந்தப் போட்டிகளில் கலந்து கொண்டார். பல போட்டிகளில் மாவட்டம் தழுவிய ரீதியில் கலந்து கொண்டு பல வெற்றிகளைப் பெற்று குறுகிய காலத்திலே சிறந்த சைக்கிளோட்டப் போட்டியாளன் என்ற மகுடத்தைப் பெற்றார். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அன்றைய சைக்கிளோட்டப் போட்டி வீரர்களுக்கு அவர் சிம்மசொப்பனமாக திகழ்ந்தார். இந்த துறையில் தொடர்ந்து முன்னேறி வந்த அவர் நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழலினால் சொந்த இடத்தை விட்டு மீண்டும் கொழும்புக்கு சென்று வெளிநாட்டு முகவராக பணிபுரிந்தார்.

கொழும்பில் தங்கியிருந்த காலத்தில் கார் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற [illegible] ஆர்வத்தின் காரணமாக கொழும்பில் நடைபெறும் கார் ஓட்டப் பந்தயங்களில் அவர் கலந்து கொண்டார். ஆரம்பத்தில் கார் ஓட்டப் பந்தயத்தில் முன்னேற முடியுமா? என்ற சந்தேகம் அவரிடமிருந்தது. இருந்தாலும் அவரது அயராத உழைப்பும் விடாமுயற்சியும் அகில இலங்கையிலே ஒரு சிறந்த கார் ஓட்டப் பந்தய வீரராக அவரை நிலை நிறுத்தியுள்ளது.

பரமேஸ் அவர்கள் ஒரு விளையாட்டு வீரராக மட்டுமல்லாது சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றார். கைதடி மக்கள் நட்புறவுக் கழகத்தின் செயற்பாடுகள் கொழும்புக்கு விஸ்தரிக்கப்பட்டபோது அதற்கு தேவையான ஒத்துழைப்புக்களையும் வழங்குவதில் அவர் முக்கியமானவராக இருந்தார். மக்கள் நட்புறவு கழகத்தின் சந்திப்புக்களை நடத்துவதற்கு தனது இல்லத்தினை வழங்கியதுடன் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக (சாவகச்சேரி தொகுதி) நடராஜா ரவிராஜ் தெரிவு செய்யப்பட்டபோது கைதடி மக்கள் சார்பில் கொழும்பில் இவரது இல்லத்தில் வைத்து வரவேற்பு நிகழ்வு ஒன்றினை நடத்துவதற்கு முழு உதவிகளையும் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவரது சேவைக்கு பல உதாரணங்களை சுட்டிக் காட்ட முடியும். கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் அங்கத்தவராக இருந்த காலத்தில் இவர் நிலைய உறுப் பினர்களுடன் இணைந்து பல பணி களை ஆற்றியுள்ளார்.

மோட்டார் காரோட்டப் போட்டி

(16ம் பக்கம் பார்க்க)

# கார் ஓட்டப்பந்தயத்தில் சாதனை புரியும் பரமேஸ்

(15ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில்

மோட்டார் காரோட்டப் போட்டிகளை சென்று பார்வையிட்டு அதனூடாக நானும் பங்கு பற்ற வேண்டும் வெற்றியீட்ட வேண்டும் என்று ஆவல் கொண்டேன். இற்றைவரை வெற்றியீட்டி வருகின்றேன். நான் முன்பு வடபகுதியில் சைக்கிளோட்டப் போட்டிகளில் பங்கு பற்றியவன். அங்குள்ள பாதைகள் எப்படியிருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அந்தப் பாதைகளில் எனது வேகமான ஓட்டத்தினால் முதலிடங்களைப் பெற்று முன்னே வந்தவன் - அந்தத் துணிவே காரோட்டப் போட்டிகளிலும் என்னைப் பங்குபெற வைத்தது.

எழுபத்தைந்துக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். இரண்டரை கிலோ மீற்றர் தூரமுடைய பாதையை பல தடவைகள் சுற்றி அதில் முன்னேறி வருபவர்களுக்கு பரிசளித்து கௌரவிக்கின்றார்கள்.

இதிலே இன்னொன்று மலையேறும் போட்டி (Speed Hill Climb) இதற்கு தனித்தனியாக ஒவ்வொருவரையும் ஓட வைத்து அதில் குறைந்த நேரக்கணிப்பில் வருபவர்களுக்கு விருது வழங்குவார்கள். இந்தப் போட்டியில் 2002 இல் நான் ஏற்படுத்திய சாதனையை எவரும் முறியடிக்கவில்லை.

கட்டுகுருந்த, தியத்தலாவ, நுவரெலியா,அனுராதபுரம், மாத்தறை, பன்னலை, மின்னேரியா போன்ற இடங்களில் இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. எல்லாப் போட்டிகளிலும் நான் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளேன்.

.தமிழர்களைப் பொறுத்தவரை பிறி-பொன்னம்பலம் என்பவர் இந்தப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். திரு.பாலசிங்கம் என்பவரும் தற்பொழுது போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றார். போட்டியில் வெல்ல வேண்டுமென்ற இலக்கு மனதிலிருக்கும் ஓடும் பாதைகளில் மேடு, பள்ளங்கள், வளைவுகள் இருக்கும். சேற்று நீரும் இருக்கும். இவற்றையெல்லாம் சமாளித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணமே இருக்கும்.

நமது நாட்டில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டி, றகர் ஆகிய போட்டிகளுக்கு பெரும் ஆதரவு உண்டு. காரோட்டப் போட்டி பங்குபற்றிய விளம்பரங்கள் நமது ஊடகங்களுக்கு கொடுப்பதற்கு யாரும் முன் வருவதில்லை. பெரும்பான்மை இன ஊடகங்கள் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. எமது மக்கள் தொலைக்காட்சிகளில் வெளிநாட்டுப் போட்டிகளைப் பார்த்து ரசிக்கின்றனர். நேரே பார்க்கவேண்டுமென்ற எண்ணம் கொள்வதில்லை.

இந்தியாவிற்கு சென்று பங்கு பற்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது. பலர் அனுசரணை வழங்குவதற்கு முன் வந்துள்ளார்கள். ஒரு தமிழ் வாலிபனாகிய நான் இப்போட்டிகளில் பங்கேற்கிறேன். நீங்களும் வந்து போட்டிகளை பார்த்து உற்சாகம் ஊட்டுங்கள்.

# அன்னை

பத்து மாதம்
சுமந்து இருப்பாள்

பத்தியம் இருந்து
பெற்று எடுப்பாள்

இரத்தத்தைப் பாலாக்கி
கொடுத் திடுவாள்

நிலாக் காட்டி
சோறு ஊட்டிடுவாள்

தாலாட்டுப் பாடி
தூங்கச் செய்வாள்

அன்பாகக் கதைத்து
ஆசையோடு முத்தமிடுவாள்

வருத்தம் துன்பம் வந்தால்
தானே வாடிப் போய்விடுவாள்

பாரினில் நாம் வாழ்வதற்கு
பல வழிகள் செய்திடுவாள்

எத்தனை உறவுகள் வந்தாலும்
அன்னை பாசத்திற்கு இணையாகுமா?

கினி மகான்

# நினைவஞ்சலி



## அமரர் கணபதி ஐயங்கன்
( சின்னத்துரை)
கைதடி மேற்கு கைதடி

**தோற்றம் 24.03.1942**
**மறைவு 13.04.2007**

அன்புத் தந்தையாய் எம்மோடு வாழ்ந்தீர்
அகிலம் போற்றிடவே எம்மை வளர்த்தீர்
துன்பமே தெரியாது தூணாகி நின்றீர்
இன்று துயர்தந்து எங்கு தூரப்போனீர்
அழுகின்றோம் ஐயா, உங்கள் ஆத்மா
சாந்தியடைவதாக

அன்னாரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்ட
அனைவருக்கும் எமது நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும்

மனைவி திருமதி றஞ்சிதம் ஐயங்கன்
மகள்- திருமதி மாலதி ராஜலிங்கம்
(அமெரிக்கா)
மகன்மார்-
குகதாஸ் (லண்டன்)
கிருதாஸ் (மால்ரா)
கமலதாஸ் (லண்டன்)

## சுமப்பாயா மீண்டும் என்னை?

அன்பில் இமயம் நீயில்லை
அடிவாரமும் சிகரமும் என்று
அளவுகள் கொண்டது இமயம்

இன்பத் தென்றல் நீயில்லை
புயலாக, சூறாவளியாக
மாற்றம் கொள்ளும் தென்றல்

கண்ணை இமை காப்பது போல்
என்னை நீ காப்பதில்லை
கண்கள் கலங்கும் வரை
இமைகள் ஏதும் செய்வதில்லை

என் வாழ்வு ஏற்றம் பெற
ஏணியாய் நீ இருந்ததில்லை
ஏற்றிவிடும் ஏணி - என்றைக்கும்
எம்முடனே வருவதில்லை

காக்கும் தெய்வமும் நீயில்லை
இம்சித்து சோதனை செய்து - இன்புறும்
இறைவனாய் நீ
இருந்ததில்லை



அம்மா சுமை தாங்க
முடியுமா - மீண்டும்
சுமப்பாயா கருவில்
என்னை
பிரசவ வேதனை தாங்குவாயா - மறுபடியும்
பிறந்திட வேண்டும் உன் மகனாக

**சி.தர்சன்**

# பிறந்தநாள் வாழ்த்து




செல்வன் குகதாஸ் சாதுரியன்

டென்மார்க் றணஸ் நகரில் வசிக்கும் திரு.திருமதி குகதாஸ் - விஜயமாலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சாதுரியன் தனது முதலாவது பிறந்தநாளை அண்ணன்மார் சஜீவன், கார்த்திக் அம்மா ,அப்பா மற்றும் உறவினர்களுடன் ஏப்ரல் 18 ஆம் திகதியன்று கொண்டாடினார்.
சாதுரியன் சகல வளங்களும் பெற்று சிறப்பாக வாழ இந்த இனிய நன்னாளில் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

# பிறந்தநாள் வாழ்த்து

H A P P Y B I R T H D A Y



H A P P Y B I R T H D A Y

செல்வன் தயாநிதி அயன்

லண்டனில் வசிக்கும் திரு.திருமதி தயாநிதி நந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அயன் தனது முதலாவது பிறந்தநாளை மார்ச் 24 ஆம் திகதியன்று வெகு குதூகலமாகக் கொண்டாடினார்.

அயன் குட்டி சகல கலைகளிலும் சிறந்து விளங்கவேண்டுமென அம்மா அப்பா சகோதரர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

# 6 வதுவருட நினைவலைகள்



தோற்றம்
02
.
02
.
1946

மறைவு
25
.
02
.
2003

**அமரர் திருமதி பாக்கியம் இரட்சுமணன்**

**அம்மா!**
**ஆறு வருடங்கள் சென்றாலும்**
**ஆறாது எம் சோகம்**
**தீராது எம் துயரம்**
**மாறாது உங்கள் அன்பு**

கணவர் (கைதடி)
பிள்ளைகள் (சுவிஸ், பாரிஸ், கொலண்ட்)

# மரண அறிவித்தல்



**பிறப்பு**
**16.09.1944**

**இறப்பு**
**19.06.2009**

## திருமதி. சிவலிங்கம் – அருளம்மா

**(ராசா)**

கைதடி வடக்கு நவபுரத்தை சேர்ந்த சிவலிங்கம் அருளம்மா அவர்கள் **19.06.2009** வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற திரு.திருமதி மார்க்கண்டு அவர்களின் அன்புமகளும், காலஞ்சென்ற திரு.திருமதி வினாசி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அன்புமனைவியும், புரட்சிதாசன்(லண்டன்), சிவாஜினி(இலங்கை), தபோஜினி(கனடா), சிவதாசன்(லண்டன்), பிறேமதாசன்(லண்டன்) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் ஆவார்.

அன்னார், சுதாஜினி(லண்டன்), சிவராசா(இலங்கை), முருகதாஸ்(கனடா), சுஜீபா(லண்டன்), அனிதா(இலங்கை) ஆகியோரின் அன்புமாமியாரும், மதுமிலா, மயூரிகா, ஜதுஷன், சுகானி, அர்வின், கனிகா(இலங்கை, அறிஸ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும், பரமேஸ்வரி(சுவிஸ்), மகாலிங்கம்(கனடா), சிவலிங்கம்(துரை-இலங்கை), சரோஜாதேவி(இலங்கை) ஆகியோரின் அன்புச்சகோதரியும், பரமேஸ்வரன்(சுவிஸ்), தர்மவதி(கனடா), ராசமணி(இலங்கை), கோகிலநாதன்(இலங்கை) ஆகியோரின் மைத்துனியும், ரவி, ரஜனி, தினேஷ், ஜயந்தினி, முகுந்தினி, கோமகன், கோமதன், கோமதி ஆகியோரின் பெரியதாயாரும், ஜான்ஸி, ஜென்ஸி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **20.06.2009** சனிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
பிள்ளைகள்

# முப்பதாண்டு சேவையில் செல்வா சன சமூக நிலையம்

கிராமத்தின் வளர்ச்சிக்கும், சமுதாய எழுச்சிக்கும் காரணமாக சன சமூக நிலையங்கள் திகழ்ந்து கொண்டிருக்குகின்றன. அந்த வகையில் கைதடி கிராமத்திலும் பல சன சமூக நிலையங்கள் பல வருடங்களுக்கு மேலாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.கைதடி வடக்கு மக்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களுக்கிடையிலான கலை, கலாச்சார பாரம்பரியங்களை வளர்த்தெடுப்பதிலும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றது. செல்வா சனசமூக நிலையம்.

07.02.1979 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சன சமூக நிலையம் யுத்தம், இடம்பெயர்வு உட்பட்ட எத்தனையோ நெருக்கடியின் மத்தியிலும் சிறப்பாக இயங்கி வருவது சுட்டிக்காட்டத்தக்கது. முப்பது ஆண்டுகளைக் கடந்து தான் சார்ந்த மக்களுக்கு பணியாற்றிக்கொண்டிருக்கும் இந்த நிலையத்திற்கு அகல்விளக்கு சார்பில் வாழ்த்துகின்றோம்.

சன சமூக நிலையங்கள் கிராமத்தின் அடையாளமாகவும் மக்களின் பிரதான தேவைகளில் ஒன்றாகவும் இருப்பதினால் "சன சமூக நிலையம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் " சன சமூக நிலையம் இல்லா த ஊர் அழகும் பாழ், அறிவும் பாழ் " என்று கூறும் அளவிற்கு சன சமூக நிலையங்களின் முக்கியத்துவம் பற்றி எல்லாராலும் பேசப்படுகின்றது. இதற்கு அமைய தமது கிராமத்தின் அழகையும் அங்குள்ள மக்களின் அறிவையும் வளர்த்தெடுப்பதில் செல்வா சன சமூக நிலையம் செய்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஈழத்தமிழ் மக்கள் எல்லோரினதும் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய தந்தை செல்வா வின் நாமத்தைக் கொண்டு அவரது பணிகளை நினைவு கூறும் வகையில் தந்தை செல்வா மீதும், தமிழ் மீதும் பற்றும், விசுவாசமும் கொண்ட கைதடி வடக்கு இளைஞர்களினால் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. மக்களுக்கு தொண்டாற்றுவதில் ஆர்வத்துடன் செயற்பட்ட சமாதான நீதவான் திரு. வேலுப்பிள்ளை அவர்களை ஆரம்ப தலைவராகக் கொண்ட இந்த நிலையம் இன்று பல தலைவர்களையும் உள்வாங்கி கைதடி வடக்கு கிராமத்தின் தலைமைத்துவத்தை தன்னகத்தே கொண்டு செயற்பட்டுவருகின்றது.

கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டு உட்பட்ட பல துறைகளிலும் நிலைய அங்கத்தவர்களுக களம் அமைத்து அவர்களின் வளர்ச்சிக்கு உதவிவரும் இந்த நிலையம் அந்த மக்களின் பொழுதுபோக்கிற்கும், அது உதவி வருகின்றது, அத்துடன் அறிவியல் வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது. பல கட்டங்களைக் கடந்துவந்த இந்த நிலையத்தின் வளர்ச்சிப்பாதையில் இந்த நிலையத்தின் நிர்வாகிகளாக இருந்த அமரர் த. தியாகராஜா, கு. நடராஜா, நா.பொன்னுத்துரை, ச.முருகதாஸ், சி.மனோகரன், ஆகியோரின் சேவைக் காலம் நிலையத்துக்கு பெயரையும், புகழையும் ஈட்டுக்கொடுத்தன.


விளையாட்டு மற்றும் கலைத்துறையில் நிலைய அங்கத்தவர்கள் சிறப்பாக வளர்வதற்கு முன்னோடிகளாக இருந்த இவர்களின் மறைவு நிலையத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகிவிட்டது.கலைத்துறையில் பல நிலையத்தின் சார்பில் தயாரிக் கப்பட்டு அரங்கேற்றப்பட்டன. இதிலே " இரு துருவம்" " பலவீனம்" ஆகிய இரு நாடகங்கள் நிலையத்திற்கு பெரும் புகழையும் பல பரிசில்களையும் பெற்றுக் கொடுத்தன. தென்மராட்சி மட்டத்தில் மட்டுமல்ல மாவட்ட மட்டத்திலும் இந்த நாடகங்கள் சிறந்த நாடகங்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


நாடக மன்றம், மாதர் மன்றம், விளையாட்டுக்கழகம் உட்பட்ட துறைசார்ந்த பல பிரிவுகளையும் கொண்டு தன்னடக்கத்துடன் செல்வா சன சமூக நிலையம் இயங்கிவருகின்றது. நிலையம் எமக்கு என்ன உதவி செய்கிறது என்று எதிர்பார்க்காமல் நிலையத்திற்கும் நாங்கள் என்ன செய்கிறோம் என்ற சிந்தனையுடன் செயற்படும் செல்வா நிலைய அங்கத்தவர்களின் சேவையும், தொண்டுள்ளமும் போற்றத்தக்கதே.

07.02.2009 இல் 30வது ஆண்டு சேவைக்குள் புகுந்து கொள்ளும் செல்வா சன சமூக நிலையத்தினை அகல்விளக்கு மீண்டும் ஒருதடவை வாழ்த்துகிறது.

தகவல் - சி . தங்கத்துரை

ATC TELECOM




நன்றிகள் ஆயிரம்
04.04.2009 அன்று Swiss Ependes மண்டபத்தில்
நடைபெற்ற எமது திருமண விழாவில் கலந்துகொண்டு
எம்மை வாழ்த்துச்சிறப்பித்த அனைத்து உள்ளங்களுக்கும் ,
தொலைபேசியி ஊடாகவும், தபால் மூலமாகவும்
வாழ்த்துக்களைத் தெரிவித்த அன்பர்களுக்கும்மற்றும்
சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து
உறவுகளுக்கும்எமதுமேலான நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்
அன்புடன்
ரவிக்குமார் பிரியா

# கைதடி மேம்பாட்டு ஒன்றியம் - சுவிஸ்
## ஒன்றுகூடல்

சுவிஸ் கைதடி மேம்பாட்டு ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடல் கடந்த 28.03.2009 அன்று சுவிஸ் பேர்ண் நகரில் இனிதாக நடைபெற்றது. இதில் பலதரப்பட்ட விடயங்கள் ஆரோக்கியமாகவும், மன நிறைவுடனும் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது. நிர்வாக உறுப்பினர் பின்வருமாறு

தலைவர் : வா . வாமதேவன்
உப தலைவர் : க. இராசதுரை
செயலாளர் : இ. சூரி
உப செயலாளர் : ப. பிறேம்குமார்
பொருளாளர் : சி. புலேந்திரன்
உப பொருளாளர் : பொ. மகேந்திரம்














சுவிஸ் கைதடி மேம்பாட்டு ஒன்றியம் எமது கைதடி கிராமத்தில் எமது ஒன்றியத்திற்குட்பட்ட 2ம், 3ம், 4ம், 5ம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக கல்வி புகட்டும் நோக்கில் இலவசக் கல்வி வகுப்புக்களைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இது அவர்களின் புலமைப் பரிசில் தேர்வுக்கு உந்து கோலாக அமைகின்றது.